# வெற்றிமணி

London
GERMANY

Vettimaniy

மணி 66 free Circulation கார்த்திகை. Nove. 2016








## திருமணத்தை எதிர் நோக்கியிருக்கும் பெண்களே!

## Money Clinic

Page 29

## வல்லினம் மெல்லினம் பாலினம்



அகில உலக
“பத்மா சுப்பிரமணியம்”
விருது பெற்றார்
கலாசூரி
திவ்யா சுஜேன்



“எல்லைக் கோட்டைத் தாண்டுவதுதான் “திரில்”









தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி




**வெற்றிமணி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
யேர்மனி
Tel: 02351/45 88 62
0163 199 2 333
e-mail: vettimaniy@hotmail.com
இங்கிலாந்து
Sanje:(0044) 07824 61 83 83
vai g (0044) 00 44 7788 195962




# Dr.நிரோஷனின் அதிசய உலகம் 1

## பெண்ணைக் கவர்ந்திழுக்க கடலடியில் ஓவியம் வரையும் காதல் மீன்கள்




1995-ஆம் ஆண்டு ஜப்பானைச் சேர்ந்த நீச்சல் வீரர்கள் கடலுக்கடியில் சென்ற போது, கடலின் தரைப்பகுதியில் வட்ட வடிவத்தில் மணல் திட்டுகளைப் பார்த்தனர்.

இது நிலப்பகுதியில் ஏற்கனவே காணப்படும் வடிவங்களைப் (crop circles) போலவே இருந்ததால், இவற்றின் மீதான ஆய்வு விரைவாகத் தொடங்கப்பட்டது. இது அறியப்பட்ட 10 ஆண்டுகளில் அடிக்கடி இதுபோல் தோன்றுவதும், மறைவதும் கண்டுபிடிக்கப்பட்டாலும் அதன் அர்த்தம் என்ன என்பது மட்டும் யாராலும் விளக்க முடியாத மர்மமாகவே இருந்தது.

ஆனால் அதற்குப் பதில் கிடைத்து விட்டது. இதுவும் ஒருவகையான மீன் தான்! குறிப்பாக வெள்ளைப் புள்ளி கோளமீன் (White Spotted Pufferfish) என்று அழைக்கப்படும் மீன் தான் இந்த மர்மத்துக்குப் பின்னால் இருக்கும் கதாநாயகன் ஆகும். கடலுக்கடியில் வாழும் இந்த மீன் தனது இணையினை கவர்வதற்காக, இது போன்ற வட்ட வடிவிலான அமைப்பினை ஏற்படுத்துமாம். இதில் ஆச்சர்யம் என்னவென்றால், இந்த வகை மீன் வெறும் 12 சென்டிமீட்டர் மட்டுமே நீளமுடையது. ஆனால் தனது பின்பகுதியினைத் தொடர்ந்து அசைப்பதன் மூலம் ஏறக்குறைய 2 மீட்டர் விட்டம் கொண்ட வட்டவடிவிலான அமைப்பினை உருவாக்குகிறது. இதன் அருகில் வரும் பெண் மீன் இதனால் கவரப்பட்டால் அந்த மீனுடன் இணைந்து அந்த வடிவத்தின் மேல் முட்டைகளை இடும். பின்னர் ஆண் மீன் குஞ்சுகள் வெளிவரும் வரை முட்டைகளைப் பாதுகாக்கும்.

பின்னர் அந்த வடிவத்தினை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிடும். வெறும் 7 முதல் 9 நாட்கள் மட்டுமே இருக்கும் இந்த வடிவங்கள், ஒரு சில நாட்களில் நீரின் வேகத்தினால் விரைவாக அழிந்துவிடும்.





நேற்று மர்மமாக இருந்த ஒரு விஷயத்திற்கு இன்று விடை தெரிந்துவிட்டது. இதே போன்று தான், நமக்கு இன்று மர்மமாகத் தோன்றும் ஒரு விஷயத்திற்கு நாளை கண்டிப்பாக விடை தெரிந்துவிடும். என்ன சொல்கிறீர்கள் நண்பர்களே? இந்த அதிசய மீனைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? இதைப் பற்றிய உங்கள் கருத்தை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook. com/scinirosh) அறியத் தாருங்கள்! Dr. Niroshan Thillainathan

தொடரும்










**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
——————————கவிஞர்.வி.க

ஓசை 242



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
*Chief Editor:*
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276



“வெற்றிமணிமொழி”
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy Ltd


# வல்லினம், மெல்லினம், பாலினம்.

## எல்லைக் கோட்டைத் தாண்டுவதுதான் “திரில்” என்கிறது இளைய சமூகம்.



வெற்றி மைந்தன் தமிழ்நாடு

இளம் வயது என்று சொல்லும் போதே உள்ளுக்குள் ஒரு உற்சாகம் கரை புரள்கிறது. இளமை எதையும் சாதிக்கும் வயது. தொழில் நுட்பங்களின் பின்னணியில் பரபரப்பதும், வீரத்தின் முன்னணியில் பயணிப்பதும், சமூகத்தின் மையத்தில் இயங்குவதும் இளமையே ! திகைப்பூட்டும் வேகமும், வியப்பூட்டும் விவேகமும் கலந்த கலவை தான் இளமை.

“பத்து இளைஞர்களை என்னிடம் தாருங்கள், உலகை மாற்றிக் காட்டுகிறேன்” எனும் விவேகானந்தரின் கூற்று நூறு முறையேனும் நமது காதுகளை எட்டியிருக்கும். முதுமைக்கும் இளைமைக்கும் ஒரே ஒரு வேறு பாடு தான். இளமை ஒரு செயலைச் செய்து முடிக்கும் போது களைப்படையும், முதுமை ஒரு செயலை செய்ய ஆரம்பிக்கும் போதே களைப்படையும் என்பார் பிரபல எழுத்தாளர் எலியட்.

இன்றைய சமூகம் இளைஞர்களுக்கு பல்வேறு விதமான வாய்ப்புகளை வழங்கியிருக்கிறது. தொழில் நுட்பம் எனும் டைனோசர் இன்றைய இளம் வயதி னரைத் தூக்கிச் சுமக்கிறது. அதன் முதுகிலிருந்து தவறி விழுபவர்கள் அதன் காலில் மிதிபட்டு அழிந்து போகும் ஆபத்தும் நேர்ந்து விடுகிறது.

உதாரணமாக இணையம் எனும் டிராகன் உங்களை எங்கே வேண்டுமானாலும் சுமந்து திரியும். ஏழு கடல் ஏழு மலை தாண்டியும் அதில் நீங்கள் பயணிக்கலாம். ஆனால் தவறான முறையில் நீங்கள் இந்த டிராகனை எதிர்கொண்டால் அதன் மூக்கிலிருந்து எழும் தீச் சுவாலை உங்களைக் காயப்படுத்தலாம். அல்லது எரித்து அழிக்கலாம் !
இளைஞர்களின் வலிமையையும், திறமையையும் செயலிழக்கச் செய்யும் வலிமை சில விஷயங்களுக்கு மட்டுமே உண்டு. போதைப்பழக்கம், கூடா நட்பு, பாலியல் போன்றவை அந்தப் பட்டியலில் பிரதானமானவை.

சில தலைமுறைகளுக்கு முன்னால் ஆண்களும் பெண்களும் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புகளே அபூர்வம். தரையில் கோலம் போட்டுக் கொண்டே முந்தானை முனை கடிக்கும் அரை தாவணிகளின் காலம் இப்போது முடிந்து போய் விட்டது. இப்போது ஆண்களும் பெண்களும் சகஜமாகப் பழகும் நிலை உருவாகியிருக்கிறது.
ஆண்களும் பெண்களும் ஒன்றாகப் பழகும் நிலையும், அவர்களுக்கிடையேயான கருத்துப் பரிமாற்றங்களும், நட்பு உரையாடல்களும், உதவும் மனநிலைகளும் மிகவும் ஆரோக்கியமானவை. இணைந்தே படித்து, இணைந்தே பணிசெய்யும் சமூகத்தில் அது மிகவும் அவசியமானதும் கூட.
எனினும் ஒரு எல்லைக் கோடு எல்லாவற்றுக்குமே அவசியமாகிறது. எல்லைக் கோட்டைத் தாண்டிப் போனால் “அவுட்” என்கிறது விளையாட்டு. எல்லைக் கோட்டைத் தாண்டிப் போனால் “ஆபத்து” என்கிறது ராமாயணம். ஆனால் எல்லைக் கோட்டைத் தாண்டுவது தான் “திரில்” என்கிறது இளைய சமூகம்.
மாற்றம் என்பது மாற்ற முடியாதது. ஆனால் எல்லா மாற்றங்களுமே வளர்ச்சிக்கானவை அல்ல. ரிவர்ஸ் கியரில் ஓடும் வண்டி முன்னோக்கிப் போவதில்லை.

இளைஞர்கள் மிகவும் கவனமாக அணுக வேண்டிய ஒரு விஷயம் ஊடகங்கள். அன்றைய நாடகங்கள் இளைஞர் களுக்கு வீரத்தைப் போதித்தன, இன்றைய ஊடகங்கள் இளைஞர்களுக்கு காமத்தைப் போதிக்கின்றன.
அவை சொல்லும் பல விஷயங்கள் இளைஞர்களின் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. கிளர்ச்சியில் மயங்கும் போது வளர்ச்சி தயங்கி விடுகிறது.

தொடர்ச்சி 4ம் பக்கம்




3ம் பக்கத் தொடர்ச்சி

## எல்லைக் கோட்டைத் தாண்டுவதுதான் "திரில்"




திருமணத்துக்கு முன் ஆணும் பெண்ணும் சந்தித்துக் கொள்வதே தவறு' எனும் காலகட்டத்திலிருந்து, 'திருமணத்துக்கு முன் சேர்ந்து வாழ்வது சரியே' எனும் இடத்துக்கு இன்றைய சமூகம் இடம் பெயர்ந்திருப்பதாய் கட்டுரைகள் கவலை தெரிவிக்கின்றன.

அதனால் தான் விவாகரத்து என்றால் அலறிய சமூகம், இன்று வானிலைச் செய்தியைப் போல அதை வாசித்துக் கடந்து போகிறது. எவ்வளவு தூரம் ஆண் பெண் இடைவெளி குறைகிறதோ அந்த அளவுக்கு மணமுறிவு எண்ணிக்கை அதிகரித்திருப்பதை புள்ளி விவரங்கள் புட்டுப் புட்டு வைக்கின்றன.

'பாலியல் தவறு' என்று யாரும் சொன்னதில்லை.
ஆனால் சரியான நேரத்தில் செய்யப்படாத
எதுவுமே தவறாகிப் போய்விடும்.

திருமணத்துக்கு முன்பே பாலியல் உறவு வைத்துக் கொள்வது இளம் வயதினரிடையே அதிகரித்திருக்கிறது என்பது கவலையளிக்கும் செய்தி. 'புதிதாய் எதையேனும் கற்றுக் கொள்ள வேண்டுமென்றோ, வரம்பு மீறித் தான் பார்ப்போமே' எனும் ஆர்வம் காரணமாகவோ தவறிழைத்து விடுகிறார்கள்.
யாருக்குமே தெரியாது என ரகசியமாய் பரிமாறப்படும் அன்னியோன்ய விஷயங்களினால் நிறைந்திருக்கிறது இணைய உலகம். ஏ.டி.எம் அறைகளில், இணைய நிலையங்களில், ஹோட்டல்களில் என தவறிழைக்கும் தருணங்களையெல்லாம் ரகசிய கேமராக்கள் கண்காணிக்கின்றன என்பதையே இணையத்தில் வெளியாகும் படங்களும், வீடியோக்களும் சொல்லிச் செல்கின்றன. சைபர் கிரைம் படியேறி கண்ணைக் கசக்கும் இளம் பெண்களின் எண்ணிக்கையே இதன் சாட்சி.

உங்களைக் குற்ற உணர்வுக்கு உள்ளாக்கும் செயல்களைச் செய்யாமல் இருப்பது உங்களுடைய தன்னம்பிக்கையை வெகுவாக அதிகரிக்கும். ரகசியச் செயல் வெளியே தெரிய வந்தால் அதனால் நேரும் அவமானமும், பின் விளைவுகளும், தலைகுனிவுகளும் உங்களுடைய எதிர்கால வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி விடும்.

மன அழுத்தம் இளம் வயதினரைத் தாக்க பாலியல் ஈடுபாடும் ஒரு காரணம் என்கிறது மருத்துவம். தவறு செய்த உணர்வோ, தவறிழைக்கத் தூண்டிய உணர்வோ மனதில் அழுத்தத்தை உருவாக்கி விடுகிறது. மன அழுத்தம் எப்போதுமே தனியே வருவதில்லை, நோய்களின் பட்டியலோடு தான் வருகிறது. தவறுகள் 'தாய்மை'யைத் தந்து சென்றால் அதன் பின் நடக்கும் சிக்கல்களைப் பற்றித் தனியே சொல்லத் தேவையில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக இவை கொண்டு வரும் உடல் ரீதியிலான நோய்கள். எயிட்ஸ் போன்ற உயிர்கொல்லி நோய்கள் தவிர இவை கொண்டு வரும் தொற்று நோய்கள் கணக்கில் அடங்காதவை. கருப்பை வாய்ப் புற்று நோய் போன்ற நோய்களுக்கும் திருமணத்துக்கு முந்தைய தவறுகள் மிக முக்கியக் காரணம் என்கிறார் கயா நாட்டு மருத்துவர் பிலோமினா மிராகு.
இந்தியாவில் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 'திருமணத்துக்கு முந்தைய உறவு' வைத்துக் கொள்பவர்களில் 52 சதவீதம் பேருக்கு தொற்று நோய் வருகிறது என்கிறது அவிஷ்கார் புள்ளி விவரம். 'முடிவெடுக்க முடியாமல் தடுமாறுவதும், டென்ஷனும், நண்பர்களின் உசுப்பேற்றலும்' தவறுகளின் முக்கிய காரணங்களாம் !
ஆரோக்கியமான நட்பாய் தோன்றும் பல நட்புகள் பின்னர் தனிமையில் சிக்கல்களுக்குரியதாய் விஸ்வரூபம் எடுப்பதுண்டு. இந்த விஷயத்தில் ஆண்களை விட பெண்கள் கொஞ்சம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்கிறார் ஜேம்ஸ் டாப்சன் எனும் திருமண ஆலோசகர். ஆண்கள் காதலைப் பெரும்பாலும் படுக்கையில் பகிர்ந்து கொள்ள விரும்புவார்கள் என்கிறார் அவர்.

இத்தகைய சிக்கல்களைத் தவிர்க்க ஆண் பெண் நண்பர்களுக்கு இடையேயான தொட்டுப் பேசும் வழக்கத்தை விட்டு விடலாம். தொட்டுப் பேசுவது தவறில்லை, ஆனால் அது ஹார்மோன்களை விழிப்படையச் செய்யும் என்கிறது அறிவியல். ஹார்மோன்கள் விழித்துக் கொண்டால் உங்கள் சிந்தனைகளில் அதுவே வந்து ஆக்கிரமித்துக் கொள்ளும் அபாயம் உண்டு. எனவே தொடுதல், முத்தமிடுதல், அன்பாய் கண்டியணைத்தல் போன்றவற்றைத் தவிர்ப்பது பாதுகாப்பானது .

சிற்றின்பச் சோதனைகளைக் கடந்து வருவது இளம் வயதினரின் முன்னால் நிற்கும் மிகப் பெரிய சவால். இந்த சோதனையைக் கடந்து வர வேண்டுமெனில் அத்தகைய சோதனைகளுக்குள் உங்களைத் தள்ளி விடும் விஷயங்களை ஒதுக்குவது அவசியம். குறிப்பாக விரும்பத் தகாத புத்தகங்கள், இணையப் பக்கங்கள், திரைப்படங்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது மனதில் களங்கம் புகாமல் இருக்க உதவும்.
முன்கூட்டியே சில விஷயங்களை நண்பர்களுக்குள் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். உதாரணமாக இந்த இந்த இடங்களை நான் தவிர்ப்பேன், இந்த இந்த நேரங்களைத் தவிர்ப்பேன், இப்படிப்பட்ட சூழல்களைத் தவிர்ப்பேன் என முன்கூட்டியே நண்பர்கள் பேசிக்கொள்வது தவறான சூழலில் சென்று தவறிழைப்பதைத் தடுக்கும்.,

தொடர்ச்சி 08 ம் பக்கம்



ஸ்ரீ முத்துமாரியம்மன்
ஜோதிட நிலையம்
பண்டித் விஜயேந்திரவர்மா
எந்தப்பிரச்சினை ஆனாலும் தீர்வு 100% உத்தரவாதம்!

இந்தியாவில் இருந்து முதல் முறையாக வருகை தந்திருக்கின்றார்.
எம்மை நாடுங்கள் தீர்வு நிச்சயம்.
வியாபாரங்கள் எதிரிகள் உடல்நிலை
வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல் விவாகரத்து
வழக்குகள் கண்திருஷ்டி படிப்பு வாகனப்பொருத்தம் மற்றும்
பலபிரச்சினைகளுக்கும் தீர்வுகாணலாம். காத்துக்கறுப்பு
இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்

வாரத்தில் 7 நாட்களும்
காலை.08.மணி முதல் மாலை 7.30 மணி வரை வரலாம்.
ஒரு முறை நம்பிக்கையுடன் வாருங்கள் நலமடைவீர்கள்.
0152 112 39 617// 0151 433 162 63
0231 28 21 4508 Adler Ster.30, 44137 Dortmund




Wilhelm Str.09
33602 Bielefeld
Lakshmi Jewellery &Silks

பட்டுச்சேலைகள் தவிர்ந்த ஏனைய
ஆடைகள் 50% தள்ளுபடியில்
பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் மிக மிக மலிவு விலையில் கிடைக்கும்
அழகிய டிசைன்களில் தரமான தங்க நகைகளுக்கு
எம்மை நாடுங்கள்
தொலைபேசி: Ruban 0179 72 35 729 Tel:0521 4283 510




2008 ஆண்டு வெற்றிமணி வெளியீடாக வந்த நூல் இது

மறுமலர்ச்சிக் காலம்

1796இல் பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டது. இவர்கள் காலத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்கள் போல அன்றி மத சுதந்திரம் நிலவிற்று. இதன் விளைவாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே சுதேச மதங்களின் மறுமலர்ச்சிகள் ஏற்பட்டன. தென்னிலங்கையிலே பௌத்தர்களும், வட இலங்கையிலே இந்துக்களும் தத்தம் சமயங்களையும் கலை கலாச்சாரங்களையும் மேல் நாட்டுத் தாக்கங்களில் இருந்து காப்பாற்றி அவற்றின் வளர்ச்சிக்கு முயன்றுழைத்தனர். பிரித்தானியரின் சமரச மதக்கொள்கை காரணமாக சுதேச மக்கள் மறுமலர்ச்சி கண்ட இவ் வேளையிற் கோயில்கள் புனரமைப்புப் பெற்றுக் கிரியைகள், சடங்குகள், விழாக்கள் மீண்டும் உற்சாகத்தோடு கொண்டாடப்படலாயின. இதன் பயனாக ஆலயங்களில் தேவதாசிகளின் நாட்டிய நிகழ்வுகளும் மறுமலர்ச்சி காணத் தொடங்கின எனலாம்.

பிரித்தானியர் இந்தியாவையும், இலங்கையையும் தமது ஆட்சி அலகாகக் கொண்டு இருந்தமையால் யாழ்ப்பாண தமிழக உறவுகள் அதிகரித்தன. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலேயே மக்கள் சென்று வருவதற்கோ நிதிப் பரிமாற்றம் செய்வதற்கோ எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை. இதனால் சமகால இந்தியாவில் ஏற்பட்ட சமய பண்பாடு மறுமலர்ச்சியின் தாக்கம் யாழ்ப்பாணத்திலும், ஏன் இலங்கை முழுவதிலும் ஏற்பட்டது என்றே கூற வேண்டும்.

இதன் காரணமாக சமய குருமார், நட்டுவர்கள், தேவதாசிகள் தமிழகத்திலிருந்து இங்கு வரும் சூழலும் அதிகரிக்கலாயின.

இவ்விரு பகுதிகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகள் காரணமாக இந்திய நாட்டுக் கோட்டைச் செட்டியார் வருகையும் ஏற்பட்டது. இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தில் வணிக வாழ்க்கையை சுற்றி நிலவிய ஒரு சூழலாக இருந்தது. யாழ்ப்பாணத்தை தமது தளமாகக் கொண்டு இருந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார் தம் மரபுகளுக்கு ஏற்ப பல கோயில்களைக் கட்டி ஆதரிக்கலாயினர்.

இவ்வாறு இவர்கள் கட்டிய கோயில்களில் குறிப்பிடத்தக்கது வண்ணார் பண்ணை சிவன் கோயில் ஆகும். இவர்கள் கலைகளில் ஆர்வம் உடையவர்களாக விளங்கியமையினால் இந்தியாவில் இருந்து கலைஞர்களை வரவழைத்து கலைப்பணி ஆற்றினர்.

இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளுள் இசையும் நடனமும் கோயிலைத் தளமாகக் கொண்டு வளர்க்கப்பட்டன. இந்தப் பயில்வு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது அன்றைய யாழ்ப்பாணச் சமூகச் சூழலேயாகும். வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைச் சுற்றி கோயிற் கலைஞர்களான தேவதாசிகள் வாழ்ந்து வந்தனர் எனக் கூறப்படுகின்றது. அதேபோல் மேலும் பல கோயில்களில் இந்நடனக் கலை மரபு இருந்து வந்ததாகத் தெரிகின்றது.

இலங்கைத் தமிழரிடையே இன்று நிலவும் நடனக்கலை மரபு பற்றிய ஆய்வு பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் வாழ்ந்து வந்த தேவதாசிக் குடும்பத்தினர் பற்றிய குறிப்புடனேயே ஆரம்பித்தல் வேண்டும். செட்டிமார்கள் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோயில்களில் ஆடற் கிரியைக்காக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தமிழகத்துச் சதிர்ப்பெண்களே இக்குழுவினர் என்று பலரும் கூறுகின்றனர்.

இக்காலத்தில் குறிப்பிட்ட கோயில்களுக்கென்று தனித்தனி நடன மாதர்கள் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் ஆகியவற்றில் அவ்வக் கோயில்களுக்கென்றே தேவதாசிகள் அமர்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் அவ்வக் கோயிற் பூசைக்காலங்களில் நடனமாடினார்கள். இவர்களில் கோயிற் காணிகளில் குடிமயர்த்தப்பட்டு அவ்வவ் கோயில்களுக்கு மட்டும் சேவகம் செய்ததாக அறியமுடிகின்றது. ஆனால் ஏனைய கோயில்களின் நிலைமை பற்றி உறுதியான ஆதாரங்கள் பெற முடியாதுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த “கனகி” எனப்படும் “கனகம்மா” எனும் தேவதாசி வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் ஒரு நர்த்தகியாக விளங்கியமை பற்றிக் கனகி புராணம் கூறுகின்றது.

நடன மகளிர்களிற் பலர் கோயில்களில் நடனமாடிய அதேவேளையிற் காதற் பரத்தையர்களாகவும் வாழ்ந்து முறை தவறிச் சென்றதால் இவர்களது வாழ்க்கை தூய்மை அற்றுக் காணப்பட்டதாக தெரிகின்றது. இக்காலத்தில் சமகாலத் தமிழகத்தைப் போன்று தேவதாசிகள் இங்கும் ஒழுக்கம் கெட்டவர்களாகத் தெரிகின்றது.

ஆகவே இவர்கள் கோயில்களில் நடனமாடுவதைப் பலர் கண்டித்தனர். இந்தக் கண்டனத்தை மேற்கொண்டோரில் நாவலர் பெருமான் குறிப்பிடத்தக்கவர். “யாழ்ப்பாணச் சமயநிலை” இல் நாவலர் பின்வரும் அறைகூவலை விடுத்தார்.

> “சைவசமயிகளே! உங்கள் கோயில்களிலே பொது
> மகளிருடைய நடன, சங்கீத, வான விளையாட்டு
> முதலியவைகளை ஒழித்து விடுங்கள் நிருவாணமாயும்
> காமத்தை வளர்ப்பதற்கு ஏதுவாயும் உள்ள
> பிரதிமைகளையும், படங்களையும் அமைப்பியா
> தொழியுங்கள் கோயில்களிலே சைவப் பிரசங்கங்கம்,
> வேத பாராயணம், தேவார திருவாசக பாராயணம்
> முதலியவற்றைச் செய்யுங்கள் ..............”

அக்காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் பல நோக்கங்களில் பொது மகளிருடைய நடன சங்கீத நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன என்பதற்கு நாவலரது “யாழ்ப்பாண சமயநிலை” சான்று பகர்கின்றது. நாவலர் தொடங்கி வைத்த தூய்மைவாத இயக்கம் காரணமாக இத்தகைய நிகழ்ச்சிகளை ஒதுக்கிய கோயில்கள் பல உள.

நாவலர் இம்மரபுகளைக் கண்டித்தார் எனக் கூறும் கருத்துக்கு முரணாக “நாவலர் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட கோயில்களிலே இசை போன்று நடனமும் ஒழுக்கமுள்ள கலைஞர்களாலே இசை போன்று நடனமும் ஒழுக்கமுள்ள கலைஞர்களாலே நடத்தப்படுதலை விரும்பிலர் எனக் கூறமுடியாது” என்ற கருத்தும் கூறப்படுகின்றது.

இங்கு முக்கியமான ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டியதாகும். நாவலர் முதலான செந்நெறிச் சமய வாதிகளால் கண்டிக்கப்பட்டு தேவதாசிகள் ஆட்டம் வெறுத்து ஒதுக்கப்பட்ட போதும் அது மக்களிடம் பெற்ற செல்வாக்கின் காரணமாக தேய்ந்து போகவில்லை. மேலும் மேலும் முதன்நிலை பெறத் தொடங்கியது என்றே தெரிகின்றது.

தேவதாசிகள் தமிழ்நாட்டில் இருந்து பெருமளவில் இங்கு வந்து சென்றனர். இவர்கள் பெரும்பாலும் ஒப்பந்த அடிப்படையிலே சில வணிகர், தரகர் முதலியோரால் கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும். வேறு சிலர் இங்கு வந்து வண்ணார்பண்ணை, இணுவில், நல்லூர், அளவெட்டி, மாவிட்டபுரம் போன்ற இடங்களில் நிலையாக வசித்து வந்ததாக தெரிகின்றது.

6ம் பக்கத் தொடர்ச்சி


Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de

5ம் பக்கத் தொடர்ச்சி

## சின்னமேளம்

### தாசிகளுடைய வண்டிகளுக்குப் பின்பாக ஓடிய கூட்டம்!..

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் கோயிலில் வாழ்ந்த நர்த்தகியான "கனகி" என்பவளைப் பற்றி "நட்டுவச்சுப்பையனார்" எனும் புலவர் அங்கதத்சுவை ததும்பக் கனகிபுராணம் எனும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூலிலே பரத்தையர் ஒழுக்கம் கூறப்படுகின்றது. தேவதாசிகள் பரத்தையர்களாக விளங்கினர் என்பதை "நாவலர் பிரபந்தத் திரட்டு" மூலம் அனுமானிக்கக்கூடியதாக உள்ளது. மேலும் நாவலரின் மருகர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளையின் வாழ்க்கை வரலாறு பற்றிய கருத்துச் செய்திகளில் அவருக்கு தாசி ஒருத்தியின் உறவு இருந்தது என்பது கூறப்படுவதில் இருந்தும் இவ் உண்மை புலப்படுகின்றது.

**1876இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் நாவலர்**
**"........................................ கைதடியிலே திருவிழா, சுதுமலையில் திருவிழா, மூத்த நயினார் கோயிலிலே திருவிழா, இணுவிலிலே திருவிழா, துன்னாலையிலே திருவழா, மருதடியிலே திருவிழா என்று சொல்லிக் கொண்டு கூட்டங்கூடிக் சஞ்சா, லேகியம் உட்கொண்டு தாசிகளுடைய வண்டிகளுக்குப் பின்பாக ஓடிக்கொண்டும் ..................... நித்திரை விழித்து உலைந்து கொண்டும் நாடோடிகளாய்த் திரிந்து கெடுவதும் திருவிழாக்காளால் விளைந்த பிரயோசங்களன்றோ ............................"**

என்று கூறப்படுவதில் இருந்து தேவதாசிகளின் நாட்டியம் எவ்வளவுக்குப் பரந்திருந்தது என்பதும் இரவிரவாக நடைபெற்றது என்பதும் தெரிகின்றது. எனவே ஜனரஞ்சகமாக செல்வாக்குடைய கலையாக இது மிளிர்ந்தமை தெரிகின்றது.

மாவிட்டபரம் கந்தசுவாமி கோயிலிலும் நடனமாதர் நடனமாடி வந்தனர். இவர்கள் இந்தியாவில் "திருப்புகலூர்" எனும் இடத்தில் இருந்து வந்ததாக நம்பப்படுகின்றது. அங்கு குருகுலமுறைப்படி நடனத்தைக் கற்று இவ்வாலயத்திலே பூசைகளின் போதும் சுவாமி வீதி உலா வரும் நேரத்திலும் சிறப்பாக மகோற்சவம் நடைபெறும் காலங்களிலும் நடனங்கள் ஆடினர். "அம்பாளு, சுப்புக்குட்டி, அழகு" எனப்படும் மூன்று நடன மாதர்களும் இங்கு நடனமாடியவர்களில் சிலர் என்று தெரிகின்றது. ஒருவர் தனியே எல்லாக் கிரியைகளிலும் நடனமாடுவது சிரமம் ஆகையால் மூவரும் மாறி மாறி ஆடினார்கள் எனப்படுகின்றது. சோழர் காலத்தில் எந்தளவிற்கு இந்த நடன மாதர்களுக்கு இடவதி, மானியங்கள், வழங்கப்பட்டதோ அதேபோன்று இங்கும் கோயில் வீதிப் புறத்தில் இவர்களுக்கென நிலங்கள், மானியங்கள் வழங்கப்பட்டு குடியிருப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கலாம். இன்னும் அவர்களது வாழ்க்கைச் செலவுக்காக கோயில் வரும்படிகளில் ஒரு பங்கும், இன்னும் உணவுப் பொருட்களும் வழங்கி வந்தனர்.

யாழ்ப்பாணத்துக் கோயில்களில் இருந்த தேவதாசிகள் கோயில்களையே தங்கள் சொந்த இருப்பிடமாகக் கொண்டு கடவுளையே தங்கள் சொந்த நாயகர்களாகக் கொண்டு "பொட்டுக்கட்டி" வாழும் வழக்கம் இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் கோயில்களில் அபிஷேகத்துக்கு நீர் கொண்டு வருவது, மாலை கட்டுவது, பள்ளி எழுச்சி, பள்ளிப்பறைப் பாடல் பாடுவது என்பவற்றையும் செய்து வந்தார்கள். இப்பேர்ப்பட்ட தேவதாசிகள் இறந்தால் கோயிலில் இருந்து தான் ஈமச் சடங்கிற்கான சகல பொருட்களும் அனுப்பப்படும். அன்றைய தினம் இறைவனுக்குப் பூசை கிடையாது.

இறைவன் தன் நாயகியை இழந்த துக்கத்தில் அவருக்கு எதுவித பூசை நடைமுறைகளும் நடப்பதில்லை. இது அக்கால சம்பிரதாயமாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தின் வழியாக நாடகக் குழுக்கள் வருகை அதிகரித்தது.

அவற்றோடு நடனமாதர் வருகையும் அதிகரித்தது.



சின்ன மேளம் தொடரும்

4ம் பக்கத் தொடர்ச்சி

## எல்லைக் கோட்டைத் தாண்டுவதுதான் "திரில்"




சின்னச் சின்னத் தீண்டல்கள் கூட உங்களைப் பெரும் ஆபத்தில் தள்ளிவிடக் கூடும்.

'இதற்கு மேல் நடக்காது' எனத் துவங்கும் எல்லா விஷயங்களும் அதைத் தாண்டிப் போகும் என்பதே அசைக்க முடியாத உண்மை ! தோளில் சாய்ந்து தூங்குவதோ, தனிமையில் கரம் கோத்துத் திரிவதோ கூட ஹார்மோன்களை உசுப்பேற்றலாம் !

"டேட் ரேப்" எனப்படும் போதை மாத்திரைகள் கொடுத்து தவறிழைக்க வைக்கும் நிகழ்வுகளைப் பற்றி அடிக்கடி செய்தித் தாள்கள் பேசுகின்றன. எனவே அத்தகைய தனிமை, மதுச் சூழல்களை அறவே ஒதுக்குங்கள். ஒருவேளை நண்பருடனோ, தோழியுடனோ சகஜமான நட்புறவு வைக்க முடியாது என்று தோன்றினால் நட்புக்குக் கொஞ்சம் இடைவெளி விடுங்கள். தப்பில்லை !

நண்பர் சொல்லும் 'வார்த்தைகளை' மட்டும் வைத்து அவரை எடை போடாதீர்கள். அவருடைய செயல்பாடுகளும், சிந்தனைகளும், என்ன என்பதை அவருடைய உடலசைவுகள், பார்வை இவற்றின் மூலம் படித்தறியுங்கள். அது உங்களை விழிப்புடன் வைக்கும்.

உங்கள் நண்பரோ தோழியோ உங்கள் குடும்பத்தினரைச் சந்திக்க வையுங்கள். நட்பைத் தாண்டிய பொறுப்புணர்வும், மரியாதையும் உங்கள் மீது உருவாகும்.

கடைசியாக ஒன்று. பாலியல் வலையில் விழுந்து விடாமல் தப்புவது உங்களுடைய மன உறுதியைச் சார்ந்தே இருக்கிறது.

குடும்ப உறவுகள் மீது அதிக மதிப்பு வைப்பது, நல்ல ஆன்மீகச் சிந்தனைகள் வளர்த்துவது, நல்ல ஒரு வழிகாட்டியை வாழ்வில் கொண்டிருப்பது, பெற்றோரை மதித்து நடப்பது போன்றவையெல்லாம் உங்களை சரியான வழியில் பயணிக்க வைக்கும்.

நல்ல பாதையில் பயணியுங்கள், தேசத்தின் நம்பிக்கைகள் உங்கள் மீதே இருக்கின்றன.

உறுதி மனதில் கொள்ளுங்கள்
இறுதி வரை வெல்லுங்கள்



# எப்படி இன் ஓர் பெண்ணை...

கண்களை சமாதானப்படுத்தினேன் - ஆனால்
அழுகையினை எழுத்துகளில் கொட்டி விடுகிறேன்.

கிழிந்த பழைய சேலைக்கு ஆயுள் அதிகம் - அதை
விட்டால் அவள் எதை உடுத்துவாள்.

வயிறு நிறைய ஊட்டி விட்டு - அடிப்பாணையில்
மிஞ்சிய கருக்லை வழித்த கஞ்சியோடு கலக்கி
பசியாறுவாள்.

அவளுக்கென்று எதுவும் இருந்ததாயில்லை... நான்
எதை கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல்
வயலுக்கு கூலிக்கு போவாள்.

கலப்பையும் மண்வெட்டியும் - கொப்பளம் போட்ட
அவள் வறுமை கரக்களை பார்த்து
இரக்கப்படாத நாள் இருக்கவே இருக்காது.

சும்மாடு இல்லாமல் தலையில் விறகு கட்டோடும்
இடுப்பில் தண்ணிக் குடத்தோடும்
மாலைக்கருக்கலில் வீடு வருவாள்.

படலை திறக்கும் சத்தம் கேட்டதும்
புழுதியோடு ஓடுவேன். - என்னை
தனிமையில் விட்டு போன கவலையோடு
தூக்கி அணைப்பாள்.

தாலி அறுந்த போது - அவள் பட்ட துன்பத்திற்கு
ஆறுதல் சொல்லும் வயதில் நான் இல்லை...

ஆண்டு சில கடந்ததும் அடுத்த கலியாணம்
கேட்டு வந்த போது - அவள்
என்னை விட்டு போகவில்லை...

வாழ்க்கையின் பாதி தூரம் கடப்பதற்குள் - அவள்
முழுதாவே நின்மதியை தொலைத்து விட்டாள்.

எலும்பையும் தோலையும் கொண்டு இயங்கும்
பிராணியாய் நகர்ந்து கொண்டு ...
பகலில் வியர்வையையும் - இரவில்
கண்ணீரையும் எனக்கு தெரியாமலே சிந்தினாள்.

வலியோடு வாழ பழகி விட்ட அவள்
ஒரு நாள் காலையில் திண்ணை
ஓரத்தில் பிரேதமாக கிடந்தாள்.

எனக்கு தெரிந்து நான் அழுத முதல் நாள் அதுவே...
சுற்றமும் சொந்தமும் கூடி எனக்கு
ஆறுதல் சொன்னார்கள். - அவளை
கொழுத்துவதற்கு கொள்ளியையும் தூக்கி தந்தார்கள்.

எரிந்து அவள் சாம்பலானாள் - நானே என்
அப்பனை போலவே குடிக்கு அடிமையானேன்.

ஆண்டு சில கடக்க எனக்கும் கலியாணம்
கேட்டு வந்தார்கள். - நான் மறுத்து விட்டேன்.
தனிமையில் என் தாய் பட்ட துயர் அறிவேன் - எப்படி
இன் ஓர் பெண்ணை விதவையாக்கிடுவேன்.











நெடுந்தீவு முகிலன்

## நினைவுகளை தூர் வாருகிறேன்

மண்ணெண்ணை நம்மில வெட்டின
தகரத்தில் என் வீட்டு கேற்று - நாய்
மட்டும் கீழால பூந்து போறத்துக்கு
இடைவெளியும் விட்டிருக்கு...

சவுக்காரம் நுரைச்ச தண்ணியும்
வீண் போகாது - கிணற்றை சுற்றி
தென்னம் பிள்ளைகளும் வாழை குட்டிகளும்...

கோடிக்கு பின்னால இருக்கிற
கொட்டிலுக்குள் பழைய சைக்கில்
றிம்முகளும் மக்காட்டகளும்
கொழுக்கி கழன்ற மூக்குப் பேனி
கை பிடி அறுந்த லாம்பு
கறள் பிடித்த றங்கு பெட்டி - கறையான்
அரித்த புத்தகங்கள் என இன்னும் எகப்பட்டவை

கழிவறைக்கு வெளியே தேஞ்சு போன
ஒரு சோடி செருப்பு - உள்ளே
தண்ணி கொண்டு போக பெயின்ற் அப்பின வாழி

எலி தட்டி விட்டு முகம் பாக்கிற கண்ணாடி
எப்பவோ உடஞ்சு போச்சு - உடஞ்சு கிடந்ததில
பெரிய துண்டு திரும்பவும் பாவனைக்கு
உட்படுத்தப்பட்டது.

மச்சம் தின்னா சாமி அறைக்குள்ள
போனதே இல்லை - ஆனால்
பல்லு தீட்டாம தேத்தண்ணி குடிச்சதுண்டு

குசினிக்குள்ள குனிஞ்சு போகாட்டி
கதவின் நிலை உச்சியில் அடிக்கும்
சப்பாணம் கொட்டியிருந்து சாப்பிட்டிட்டு
எழும்பவே ஏவற வந்திடும்.

சாணி மொழுகிய திண்ணை
சாய் ஓலைப் பாய் - தலைக்கு
வைக்க உடுப்பு பொட்டாளி
கதவருகில் கை விளக்கு - நிமிர்ந்து
பார்த்தால் கிடுகு துவாரம் வழியாக நிலா
சரிந்து படுத்தால் முற்றத்தில் மல்லிகை
குப்புற படுத்தால் கனவில் பக்கத்து வீட்டு செவ்வந்தி

எல்லாத்தையும் விட்டு தூர வந்து விட்டு - ஒவ்வொரு
நாளும் நினைவுகளை தூர் வாருகிறேன்


BCN·TRAVELS
Consulting Network



Offnungszeiten:
Mo-Sa 9:00-20:00 Uhr

எமது துரித பணமாற்றுச்சேவை
இலங்கை - இந்தியா

VALUTRANS
TEMPO MONEY TRANSFER
Hermes PaketShop
Ria MONEY TRANSFER





உலகின் முன்னணி விமான நிறுவனங்களை
ஒன்றிணைத்து சலுகை விலையில் உத்தரவாதமான
சேவையினை வழங்குகின்றோம்
EMAIL:-bcntravels@hotmail.de
BCN Travels// Consulting Network (TBW)
UG Inh.Rasan.Sivalingam
bcntravels@hotmail.de,consultingnetwork@hotmail.de
Tel: 0231 10 87 63 60
Rheinische str-72,44137 Dortmund Germany Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69

# கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்



சேவியர்

2

## கொடுங்கள், பெற்றுக் கொள்வீர்கள்

”நிறைய பணம் வேணும், என்னங்க செய்யலாம் ?” என யாரிடமாவது கேட்டுப் பாருங்கள். பல ஐடியாக்கள் சொல்வார்கள். நல்ல சேமிப்புத் திட்டம், நீண்டகால வைப்புத் திட்டம், தங்க நகைத் திட்டம், ரியல் எஸ்டேட் இப்படி ஏதோ ஒன்றைத் தானே ? ஆனால் கிறிஸ்தவமோ இருப்பதையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுங்கள், அப்போது நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள் என்கிறது.

பிறருக்குக் கொடுப்பதை இயேசு அழுத்தம் திருத்தமாகப் போதித்தார். இறைவனிடமிருந்து நாம் பெற்றுக் கொள்வதே பிறருக்குக் கொடுப்பதற்காகத் தான் என்கிறது கிறிஸ்தவம். ”ஏழைக்கு இரங்கி உதவிசெய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார் அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்” என பகிர்தலை உற்சாகப்படுத்துகிறது விவிலியம்.

நியாயத் தீர்ப்பு நாள் ஒன்று உண்டு. அன்று நல்லவர்கள் வலப்பக்கமும், தீயவர்கள் இடப்பக்கமும் நிற்பார்கள். இருவருமே இறைவனை நேசித்தவர்கள், மத செயல்களில் ஈடுபடுபவர்கள், வழிபாட்டில் குறை வைக்காதவர்கள். ஆனால் இரு பிரிவினருக்கும் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு.

வலப்பக்கம் நிற்பவர்கள் ஏழைகளுக்கு உதவியவர்கள். பசியாய் இருந்தவர்களுக்கு உணவளித்தவர்கள். தாகமாய் இருந்தவர்களுக்கு நீர் கொடுத்தவர்கள். ஆடையின்றி இருந்தவர்களை உடுத்தியவர்கள். நோயுற்று இருந்தவர்களைப் பார்க்க வந்தவர்கள்.
அன்னியனாய் இருந்தவர்களை வரவேற்றவர்கள். அப்படி அவர்கள் ஏழைகளுக்குச் செய்தது எல்லாமே இறைவனுக்குச் செய்ததாயிற்று ! என்கிறார் கடவுள்.

பிறருக்கு உதவுகின்ற மனித நேய சிந்தனை இல்லாதவர்கள் விண்ணகத்தில் நுழைய முடியாது என்பது தான் இயேசு போதித்த சிந்தனைகளில் முக்கியமான ஒன்று.

அவருடைய வாழ்க்கையிலும் அவர் எப்போதுமே ஏழைகளின் பக்கமாகவே நின்றார். பிறந்த போது மாட்டுத் தொழுவம், வளர்கையில் தச்சுத் தொழிலாளியின் குடிசை, சாவின் போது சிலுவையில் குற்றவாளியாய் மரணம், மரித்தபின் ஏதோ ஒருவருடைய கல்லறையில் அடக்கம். என ஏழைகளின் சாயலாகவே ஒவ்வொரு கட்டத்திலும் இருந்தவர் இயேசு.

”பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை” எனும் போதனையையே இயேசு முன்வைத்தார். கொடை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான சில வழிகாட்டல்களையும் அவர் தனது போதனைகளின் மூலமாக வைத்தார். கொடுத்தல் பற்றி சில சிந்தனைகளை மனதில் கொள்வோம்.

1. முகமலர்ச்சியோடு கொடுக்கவேண்டும். பிறருக்குக் கொடுப்பது என்பது நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய பாக்கியம் என நினைத்து உதவ வேண்டும்.

2. ரகசியமாய் உதவ வேண்டும். வலது கையால் நீங்கள் செய்யும் உதவி இடது கைக்குக் கூட தெரியக் கூடாது. மறைவாய் கொடுப்பதைக் காணும் இறைவன் பலன் தருவார்.

3. நல்ல சிந்தனையோடு கொடுக்க வேண்டும். கட்டாயத்தினாலோ, தனது பெயருக்காகவோ, கடமைக்காகவோ, பிறருடைய வசைக்குத் தப்பியோ அல்லது வேறு எந்த காரணத்துக்காகவோ கொடுப்பது தவறு. சக மனித கரிசனை, அன்பு இதன் அடிப்படையில் மட்டுமே உதவ வேண்டும்.

4. பிறருக்குக் கொடுப்பது என்பது விண்ணகத்தில் செல்வம் சேர்த்து வைப்பது போல. அது பூச்சியாலும் துருவாலும் சேதமடையாது என்கிறார் இயேசு. அந்த மனநிலையோடு கொடுக்க வேண்டும்.

5. பிறருக்குக் கொடுப்பது என்பது இறைவனைப் புகழ்வதைப் போன்றது என்கிறது பைபிள். எவ்வளவு கொடுத்தோம் என்பதை அளவிட வேண்டுமெனில், மீதம் நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பதை வைத்தே அளவிடவேண்டும்.



6. குற்ற உணர்விலிருந்து விடுபட பிறருதவிப் பணிகளை செய்யக் கூடாது. இயேசுவின் மீதான அன்பும், சக மனிதன் மீதான அன்பும் மட்டுமே ஈகையை தூண்டவேண்டும்.
உள்ளதிலிருந்து கொடுப்பதை விட, உள்ளதையெல்லாம் கொடுப்பதும், உள்ளத்தையே கொடுப்பதும் உயர்வானவை.

7. கடவுள் திரும்பத் தருவார் எனும் எண்ணத்தில் நாம் உதவக் கூடாது. கடவுள் இதயத்தைப் பார்க்கிறவர், நமது உண்மையான தேவைக்கு ஏற்ப அவர் நமக்கு அளிப்பார்.

8. நம்மிடம் இருக்கும் மண்ணுலக செல்வங்களை நாம் பிறருக்கு அளிக்கும்போது, இறைவன் விண்ணுலக செல்வங்களை நமக்கு அளிப்பார்.

9. எவ்வளவு கொடுத்தோம் என்பதல்ல, எந்த மனநிலையில் கொடுத்தோம் என்பதே முக்கியம். அளவைப் பார்த்து மதிப்பிடுவது மனித இயல்பு, அகத்தைப் பார்த்து மதிப்பிடுவது இறை இயல்பு.


10. கொடுங்கள். மனிதநேயம் என்பது பெறுதலில் அல்ல, கொடுத்தலில் தான் நிறைவு பெறும். கொடுக்கக் கொடுக்க வளர்வது அன்பு மட்டும் தான்.

”கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பார் அவரே ஆசி பெற்றவர்.” நீதிமொழிகள் 22 :9



Dr. IN

# நீரழிவு நோயின் நரம்புப் பாதிப்புக்கள்!





டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்


அடிக் காலைத் தூக்கியபடி ",இஞ்சை பாருங்கோ! காலிலை ஒரு புண்" என்று சொடடலியவர் திடீரெண்டு கதிரையிலிருந்து பதகளித்து எழுந்தார். "ஒரு கால் செருப்பைக் காணவில்லை, எங்கை விழுந்துதோ தெரியவில்லை" என்றார்.
"வயிறு எந்த நேரமும் ஊதலாகக் கிடக்குது. சாப்பிட முடியவில்லை. ஓங்காளமாகக் கிடக்கு" என்றார் மற்றொருவர். ,இவரது பிரச்சனை உணவு சமியாப்பாட்டால் ஏற்பட்டது அல்ல. "ஐயாவாலை ,இப்ப தானா எழும்ப முடியவிடடலை. நாங்கள் தான் தூக்கிவிட வேண்டும். சரியான பாரம், என்னால் முடியவில்லை" ,இவர் எழும்ப முடியாததற்குக் காரணம் அவரது அதித எடையோ வயசின் தளர்ச்சியோ காரணம் அல்ல.
அவர்கள் அனைவரது பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் நீரிழிவு நோய்தான். நீரிழிவு நோயால் நரம்புகள் சேதமடைந்தவர்கள். ஆனால் வெளித் தோற்றத்தில் எந்தவித மாற்றங்களும் அவர்களில் தென்படுவதில்லை. சேதமடைந்தவை ஒரேவிதமான நரம்புகள் அல்ல. வேறு வேறு வகைப்பட்ட நரம்புகள் ஆகும்.

நீரிழிவு நோயாளிகளில் 60 முதல் 70 சதவிகிதமானவர்களுக்கு ஏதவாவது ஒரு அளவில் நரம்பு சேதமடைந்து ,இப்பதாக சொல்லப்படுகிறது. சிலரில் பாதிப்பின் அளவு குறைவாக ,இருக்கும் சிலரில் அதிகமாக, இருக்கும். ,இன்னும் சிலரில் பாதிப்புகள், இந்தபோதும் வெளிப்படையாக அறிகுறிகள் அவர்களுக்குத் தென்படாது, இருக் கவும் கூடும்.
நரம்புப் பாதிப்பு என்றால் கை கால்களில் விறைப்பு, எரிவு, விருவிருப்பு, வலி என்பன என்றுதான் நாம் எண்ணுகிறோம். ஆனால் முக்கிய உறுப்புகளான, இருதயம், உணவுக் கால்வாய், பால் உறுப்புகள் போன்றவற்றிலும் நரம்புகள் பாதிக்கப்படலாம்

என்பதைப் பெரும்பாலானவர்கள் அறிந்திருப் பதில்லை. யாருக்கு வரும். நீரிழிவு உள்ள அனைவருமே பாதிக்கப்படக் கூடுமாயினும் வயதானவர்களிலும், நீண்டகாலமாக நீரிழிவு நோய் இருப்பவர்களிலும், நீரிழிவு நோயை சரியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கா தவர்களுக்கும் வருவதற்கான சாத்தியம் மிக அதிகமாகும். இத்தத்தில் கொலஸ்டரோல் அதிகமாக உள்ளவர்களும், குண்டான எடை உள்ளவர்களும், நரம்புப் பாதிப்பிற்கு ஆளாவது அதிகமாகும்.
அதேபோல் உயர், இத்த அழுத்தம் உள்ளவர் களும் கூடுதலாகப் பாதிக்கப் படுவார்கள். அறிகுறிகள் எவை அறிகுறிகள் பலவகைப்படும். எந்த நரம்புகள் பாதிக்கப் பட்டுள்ளன என்பதைப் பொறுத்து அறிகுறிகள் மாறுபடும். குளிர், சூடு, தொடுகை உணர்வு போன்றவற்றை எங்களால் உணரச் செய்பவை உணர்வு நரம்புத் தொகுதி ஆகும்.




கால்வாய் சிறுநீர்த் தொகுதி போன்ற உள்ளுறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்து (autonomic nervous sy தன்னிச்சை நரம்புத் தொகுதி ஆகும்.


கை கால்கள் போன்றவற்றை, இயங்கவைப் பதற் கான தசைத் தொகுதிகளில் பாதிப்பை ஏற்படுத் துபவை (motor nervous system) ,இயக்கி நரம்புத் தொகுதி ஆகும்.

உணர்வு நரம்புத் தொகுதிப் பாதிப்புகள் பெரும்பாலான நீரிழிவு நோயாளிகளிடம் காணப படும் நரம்புப் பாதிப்பு, இதுவே ஆகும். குடல்கள், பாதம், கைகள், உள்ளங்கை புறங்கை விரல்கள் போன்றவற்றில் வலி, எரிவு உணர்வு குறைதல் போன்ற அறிகுறிகளாக வெளிப்படும். அந்தப் பகுதிகளில் வலி, வெப்பம், தொடுகை போன்ற வற்றை குறைவாகவோ அல்லது முற்றாகவோ நோயாளியால் உணர முடியா திருக்கும்.

அந்தப் பகுதிகளில் எரிவு, குத்துவது போன்ற உணர்வு, நமைச்சல் போன்ற வேதனைகள் ஏற்படலாம். சேற்றில் கால் வைத்தது போலிருக் கிறது என்று ஒரு நோயாளி குறிப்பிட்டார். ,இத்தகைய அறிகுறிகள் யாவும் நோயாளியால் மட்டுமே உணரக் கூடியவை.


மருத்துவரோ அல்லது உறவினர்களோ காண முடியாத உணர்வுகளாகும். சிலரில் சுரீரெனக் குத்துவது போன்ற கடும் வலி ஏற்படலாம். வேறு சிலரில் தசைப்பிடிப்பு அல்லது. குறண்டைபோன்று அறிகுறிகளும் தோன்றும்.
இத்தகைய நரம்பு வேதனைகள் ,இரவு நேரத்தில் அதிகமாகத் தெரியும், இதற்கு எதிர்மாறாக உணர்வு அதீதமாக, இருப்பதும் உண்டு. சாதாரண மான சருமத்திடட தொடுகைகூட கடும் வேதனையை அவர்களில் ஏற்படுத்தலாம். பாதங்கள் கால் போன்றவற்றில் உணர்வு குறைவதால் சமநிலை பாதிப்படைவது முண்டு. உணர்வு தெரிவது குறைவதால் தசைகளின் ,இயக்கத்தில் தளர்வு ஏற்படலாம். இதனால் தசைநார்கள் பலம், இழப்பதுடன் அவை தளர்ச்சியடையவும்கூடும்.
இதனால் பாதம் கணுக்கால் மற்றும் விரல்களின் மூட்டுகள் பலமிழக்கலாம்.

முள் குத்துவது, செருப்பு சப்பாத்து போன்ற காலணிகள் வெட்டுவது போன்றவை காலிலுள்ள விறைப்புத் தன்மையால் பாதிப்புற்றவர்களுக்குத் தெரிவதில்லை. அதே போல புண்கள் சீழ்பிடித் தாலும் வலி தெரிவதில்லை.
இதனால் புண்கள் பெருகி, அழுகக் கூடும். பல நீரிழிவு நோயாளர்களின் விரல்கள், கால் போன்ற வற்றை சத்திரசிகிச்சையால் அகற்ற நேர்வது இதனால்தான்.






தன்னிச்சை தொகுதிப் பாதிப்புகள் தன்னிச்சை நரம்புத் தொகுதி சேதமுறுவதால் ,இருதயம், சுவாசத் தொகுதி, உணவுக் கால்வாய் சிறுநீர்த் தொகுதி போன்ற உள்ளுறுப்புகளில் பாதிப்புகள் ஏற்படும். ,இதனால் ,இரத்த அழுத்தம், குருதிச் சீனியின் கட்டுப்பாடு போன்றவற்றில் சிக்கல்கள் ஏற்படலாம். குருதிச் சீனியின் அளவானது மிகக்குறையும் போது (below 70 mg/dL) வியர்வை, பதற்றம், அமைதியின்மை போன்ற அறிகுறிகள் வழமையாகத் தோன்றும். ஆனால் தன்னிச்சை நரம்புத் தொகுதி சேதமுற்றவர்களுக்கு இவ்வாறு தோன்றாது, இருக்கக் கூடும். இதனால் குரதியில் சீனியின் அளவு அதீதமாகக் குறைவதை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்க முடியாத ஆபத்து உண்டு. நரம்புப் பாதிப்பு ஏற்படும்போது ,இருதயம் மற்றும் குருதிக் குழாய்களின் ,இயல்பான செயற் பாட்டில் தொய்வு ஏற்படுவதால் ,இரத்த அழுத் தத்தை உடல் நிலைக்கு ஏற்ப ஏற்றி இறக்கிச் சமன்படுத்துவதில் பிரச்சனை எழலாம்.







T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd




மனிதன் இன்று மின்சாரமில்லை என்றால் சர்வமும் அடங்கிப் போன சடலமாக மாறுகின்றான். காரணம், மண்ணில் கால் பட மழலை மனதுடன், நெல்லை விதைத்து நிழலில்ப் படுத்து, தினமும் உழைக்கும் உடலும் தியானத்தில் துளிர்க்கும் உயிரும் என்று வாழ்ந்த அந்தக் கால மனிதனை நாகரிகமற்ற மனிதன் என்று கூறும், அதி நாகரீகமான மனிதர்கள் உள்ளங்கால் முதல் உச்சம் தலை வரை உடையில் மறைத்து, கேட்க வேண்டிய காதை கத்தும் சாதனத்தால் அடைத்து, பார்க்கவேண்டிய கண்களை நித்தம் காணொளிக்குள் புதைத்து இயந்திரங்களைத் தூக்கித் திரியும், உயிருள்ள சாதனமாக வாழ்கின்றார்கள்.




## ஒருநாள் மின்சாரம் தடை ஏற்பட்டால்

ஒருநாள் மின்சாரம் தடை ஏற்பட்டால் உலகில் உயிரிழப்பு பல நூறாயிரமாகிவிடும். இப்படிப்பட்ட அத்தியாவசியத்தில் ஒன்றாகிய மின்சாரம் இன்றைய மனிதனின் எண்ணற்ற கண்டுபிடிப்பல்ல, இதிகாச மனிதனும் இன்புற்ற கண்டுபிடிப்பு என்றால் நம்ப யார் தயார்? யார் தயாராக இல்லாவிட்டாலும் உண்மை அது தான். ஆதாரம் இல்லாமல் யாரையும் நம்பவேண்டாம் இதோ ஆதாரம்.




கோவில்களை உயரமாய்க் கட்டியது கட்டிடக் கலைஞர்களின் கைவண்ணத்தைத் தெரிவிக்கின்றது. கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று முதலாவதாய் சொன்ன நபருக்கு மின்சாரம் பற்றிய முழு அறிவும் இருந்திருக்கின்றது. கோவில் இல்லாத ஊரில் விண்ணில் இருந்து நெருப்பு மழை வரும் என்று கூறியுள்ளார்கள். இது ஒரு அதியுயர் பௌதீகக் கருத்தாகும்.
அவர்கள் கூறிய வானில் இருந்து வரும் நெருப்பு மழை என்பது மின்னல். மின்னல் என்பது மின்னின் இன்னொரு வடிவம் சூரிய வெப்பத்தால் வாயுவாகும் நீர்த்துணிக்கைகள் வானில் சென்று அங்குள்ள அழுத்தமும் ஏற்றமும் காரணமாகவும் நேர் மறை ஏற்றங்களுக்கிடையான சக்திமட்ட வித்தியாசம் காரணமாகவும் சக்தியிழப்புக்கள் ஏற்பட அங்கே மேகங்களின் நடுவே 10 மில்லியன் கிலோ வாட்ஸ் அளவிற்கு மின்சாரம் பாய்கின்றது. (ஒரு மின்னல் அடித்தால் பாதி உலகிற்கே பாதி நாளுக்குத் தேவையான மின்சக்தியைக் கொடுக்கலாம்.)

இந்த மின்னலில் இருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதற்காக இடிதாங்கி கருவிக்கான அடிப்படை அஸ்திவாரத்தைப் போட்டவர் 1749 ஆம் ஆண்டு பென்ஜமின் பிராங்கிளின் என்பவராகும். ஆனால் காலத்தால் கணிக்க முடியாத தொன்மை மிகு எங்கள் கோவில்களில் இதிகாச முதாதையர்கள் இந்த இடிதாங்கியை வடிவமைத்து அதை மனிதர்கள் வாழும் ஒவ்வொரு பிரதேசத்திலும் மிகவும் உயரமாக கோபுரங்களை எழுப்பி அதன் உச்சியில் பொருத்தினர்.
எம் முன்னோரால் உருவான இடிதாங்கி எப்படி இயங்குகின்றது என்று தெரியுமா? தங்கம் வெள்ளி செம்பு என்று ஐந்துவகை உலோகங்களைக் கலந்து செய்த நுனி கூர்மையாக இருக்கும் உருண்டையான குவளை போன்ற தோற்றமளிக்கும் கலசங்களை கோவிற் கோபுரங்களின் உச்சியில் பொருத்துகின்றனர், அதைத் தொடர்ந்து அந்தக் கலசங்களுள் தானியவகைகளைக் கொட்டுகின்றனர்.

நெல், வரகு, உப்பு, சோளம் போன்ற தானியங்களைக் கொட்டினாலும் வரகை அதிகமாகக் கொட்டுகின்றனர் காரணம் என்னவெனில் இன்றைய நவீன விஞ்ஞானம் ஆராய்ந்து ஒத்துக் கொண்டுள்ள அந்தக் காரணம் மின்னலில் வரும் மின்காந்தத்தை உறிஞ்சும் ஆற்றல் அந்தத் தானியங்களில் உள்ளது என்பதாகும்.
இந்த உலகம் எதில் நிலைப்படுத்தப் பட்டுள்ளது, பிரபஞ்சம் எதை நோக்கி நகர்கின்றது என்பதனைத்தையும் ஆராயாத விஞ்ஞானம், முதாதய மனிதரை மூட நம்பிக்கை மனிதன் என்று கூறுகின்றது. அந்த மனிதன் கண்டுபிடித்து கலை வண்ணத்துடன் வடிவமைத்த நடராசர் சிலையில் உள்ள பௌதீக மற்றும் விண்வெளி விஞ்ஞானத்தை ஆராய ஆயிரம் ஐன்ஸ்டீன்கள் வாந்தாலும் முடியாதென்பதே 100 விழுக்காடு உண்மையாகும்.

இன்று செயற்கை மின்னலை ஏற்படுத்தி அதை குறிப்பிட்ட திசைக்கு அனுப்பி அதன் மூலம் எதிரியைத் தாக்கலாம் என்று ஆராய்ந்துவரும் நவீன விஞ்ஞானம் நாளை அதைக் கண்டு பிடித்து வெற்றியளித்து விட்டால் தானே முதலிற் கண்டு பிடித்தேன் என்று உரிமை கொண்டாடும். வேப்பமர மருத்துவக் குணத்திற்கு வெளிநாட்டவர் உரிமை கொண்டாட கை கட்டி வேடிக்கை பார்க்கும் நாமெல்லோரும் நாளை அதே போல் கை கட்டி வேடிக்க பார்க்கும் நிலை ஏற்படும்.
இருப்பினும் இதற்கெல்லாம் எமக்கு நேரமில்லை காரணம் என்னவென்றால், எம் நேரத்தை முடிவு செய்வது அந்த ஏமாற்று விஞ்ஞானிகளே. வக்கிரம், காமம், கோபம், கொலைவெறி, தலைக்கனம் இவற்றையெல்லாம் ஏற்படுத்தும் நவீன சாதனங்களை( மிடுக்குத் தொலைபேசி, கணனி, ஆடம்பர சாதனங்கள்) தயாரித்து ஆசை என்ற அரக்கனை அடிமனதில் புகுத்தும் விளம்பரங்களை காட்டி அதனூடாக யோசிக்க நேரமில்லாமல் சுவாசிக்கவும் நேரமில்லாமல் இது தான் வாழ்க்கை என்ற மாயையை எமக்குத் தந்து எங்கள் வரலாற்றை மொழிபெயர்த்து படித்து தொழில்நுட்பத்தைக் கண்டு பிடிக்கும் பிற மொழி விஞ்ஞானிகளே இத்தனை பெரிய விடையங்களைக் கண்டு பிடித்தால், எங்கள் தாய் மொழியில் இருக்கும் அற்புதங்களை எம்மால் ஆராய்ந்து அறிந்துகொள்ள முடியாதா?

இன்றே படிக்கத்
தொடங்குவோம்,
தமிழினைத்
தரணியில் நிலைநாட்ட,
கசடற முதலதை
நாம் கற்போம்.



Theeban Kiosk
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
வாரத்தில் 7 நாளும்
திறந்திருக்கும்
மாலை 22.00 மணிவரை
01741 39 59 78
Hohenfriedeberger Straße 01
46325 Borken

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Dortmund நகரில் எட்டாவது ஆண்டில் எங்கள் சேவை!
பட்டுப்புடவைகள் பஞ்சாபிகள் மற்றும் பாட்டிசாறிகள்
அன்பளிப்புப் பொருட்கள் இவற்றுடன் மாற்றுக்குறையாத
தங்கத்திற்கும்பெயர் பெற்ற ஸ்தாபனம்
Gopara Gnanam
Tel: 0231/5450028 Mob:01713306542
Rheinische Str. 81- 44137 Dortmund



# திருமணத்தை எதிர் நோக்கியிருக்கும் பெண்களே!



கௌசி

பெண்ணைப் பெற்ற பெற்றோர் அவளை ஒரு ஆணிடம் கையளிக்கும் வரை யார் பொருத்தமானவன் என்று தேடிக்கொண்டே இருப்பார்கள். அலை அடித்துக் கொண்டுதான் தான் இருக்கும். காற்று வீசிக் கொண்டுதான் இருக்கும். பெற்றோரும் வரன் தேடிக்கொண்டுதான் இருப்பார்கள். ஏனென்றால் தனித்து ஒரு மனிதனால் இன்பமாக வாழ்ந்துவிட முடியாது. அதனால் பொருத்தம் தேடி இரு மனங்களைப் பொருத்திவிடுகின்றார்கள். ஆனால், தேடி ஆராய்ந்து, சேர்த்துவைக்கும் திருமணங்கள் சில ஆண்டுகளில் மனப்பொருத்தம் இன்றி ஒருவரை ஒருவர் குறை கூறிய வண்ணம் பிரிந்து அகன்று விடுகின்றன.

காரணம் தான் என்ன? தேடிவைத்தல் நன்றா? அவர்கள் தேடிக்கொள்ளல் நன்றா? வாழ்க்கை என்பது ஒரே ஒருமுறைதான். இதை ஆத்திகனும் நம்ப வேண்டும். நாத்திகனும் நம்ப வேண்டும். மறுபிறப்பு உண்டென்று நம்பும் ஆத்திகன் கூட நம்பவேண்டியது மறுபிறப்பில் அவன் சூழல் வேறு, சொந்தம் வேறு, வாழ்க்கை வேறு, ஏன் .... அவனே வேறு. முற்பிறப்பு பற்றி ஒரு அணுக் கூட அவனால் புரிந்து கொள்ளமுடிவதில்லை. புரியாது வரப்போகின்ற மறு பிறப்புக்காக புரிந்து கொள்ள வேண்டிய இப்பிறப்பில் அனுபவிக்க வேண்டிய எத்தனையோ விடயங்களை இழந்து வாழ்வோர் பலர். இவ்வாறு இருக்கும்போது பிறந்த பிறப்பை மனிதன் புரிந்து நடந்து கொள்ள வாழ்க்கையைப் பூரணமாக வாழவேண்டும். அதில் பிரிவுகளோ இணைவுகளோ காரணத்தோடே நடக்க வேண்டும்.

கலாச்சாரம் என்ற பெயரிலும் பிறர் எம்மைப்பற்றி என்ன நினைத்து விடுவார்கள் என்னும் தன்மான உணர்விலும், அந்தஸ்து வெறியிலும் இளைய தலைமுறைகளின் எதிர்கால வாழ்க்கையை சீரழிக்கும் எத்தனையோ பெற்றோர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். எமது பிள்ளைகளின் குடும்ப வாழ்வு என்று நினைத்து அவர்கள் சந்தோசமே எமது சந்தோசம் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கின்ற பொழுதே பொருத்தமான கணவனைப் பெண்ணுக்கும் பொருத்தமான மனைவியை ஆணுக்கும் தெரிவு செய்ய முடியும்.

பொதுவாகவே பொருத்தம் பார்த்து தேர்ந்து செய்கின்ற திருமணங்கள் குடும்பங்களின் நிலைமைகளை கருத்தில் கொண்டு செய்யப்படுகின்றன. இதில் பணம் என்பதை மீறிப் பண்பை கவனித்தல் அவசியமாகின்றது. ஐந்து விரலும் ஒன்றாக இல்லாவிட்டாலும் ஒரு மரபணுவில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு அந்த மரபணுத் தாக்கம் இல்லாது விடாது. சகோதரர்களிடையே ஒற்றுமைப் போக்கு சிலவிடயங்களில் காணப்படும். அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு இருக்கின்ற குணமானது மற்றைய சகோதரர் சிலரிடமாவது இருக்க வேண்டும். முயற்சி இல்லாத சில சகோதரர் இருந்தால் மற்றையவரிடமும் அக்குணம் இருக்க சந்தர்ப்பம் இருக்கின்றது. ஒருவர் கோபக்காரனானால் மற்றையவர்களிடமும் இக்குணம் இருப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கின்றது. குடும்பப் பழக்க வழக்கங்கள் எவ்வாறு கூட வருகின்றது என்றால் ஒன்றாக வளருகின்ற சகோதரர்கள், ஒருவரை ஒருவர் பார்த்து வளருகின்ற போது பழக்கவழக்கங்கள் அவ்வாறே பின்பற்றப்படுகின்றன. பேசுகின்ற தன்மை, நடவடிக்கைகள், சமூகப்பார்வை அனைத்துமே ஒன்றாக அமைகின்றன. தொற்று வியாதி போல் கூடவே இருந்து மூளை கற்றுக் கொள்ளும் விடையங்களாக இவை அமைகின்றன.

திருமணங்கள் முறிவடைந்து விடக்கூடாது. என்று அக்கறை கொள்ளும் பெற்றோர் இதனாலேயே குடும்ப நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு திருமண ஒப்பந்தங்கள் செய்கின்றார்கள். ஆனால், இளந்தலைமுறையினர் இதை உணர்ந்து கொள்வதில்லை. நான் குடும்பத்தை திருமணம் செய்யவில்லை. அவரைத்தான் திருமணம் செய்யப் போகின்றேன் என்று அடம் பிடிக்கின்ற இளையவர்கள் பெற்றோர் அனுபவத்தை சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அத்துடன் பெற்றோர் பார்க்கும் பொருத்தம் சரிதானா என்னும் பரிசீலனை செய்யும் உரிமையும் ஒரு பெண்ணுக்குத் தேவை.

காதல் உணர்வினால் இணைந்து கொள்ளும் இளந்தலைமுறையினர் கூட தற்செயலாக வருகின்ற ஒரு ஈர்ப்புக்குத் தம்மை முழுமையாக ஈடுபடுத்த முயலுதல் கூடாது. எதிர்காலம், திருமணம், குடும்ப வாழ்க்கை, குடும்ப மகிழ்ச்சி, யதார்த்தம் இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே திருமணத்தை முடிவு செய்தல் வேண்டும். முடிவு செய்த பின் முறித்துக் கொள்ள முன்வருவதை விட முதலிலேயே முயற்சி செய்து தனக்கு வரும் கணவனை புரிந்து கொண்டு திருமணம் செய்வது அவசியமாகின்றது. அதற்கு எத்தனை காலமும் பொறுத்திருக்கலாம். திருமணத்தின் முன் அவரைப் புரிந்து கொள்ள அவருடன் பழக முடியாது என்னும் பிற்ப்போக்கான எண்ணத்தைக் கைவிட்டுவிடுங்கள். நன்றாக நண்பர்களாகவே பழகிப் பாருங்கள். முடிவை எடுத்துவிட்டு முறிக்க முயலாதீர்கள். உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு கண்டுகொள்ள முடியாதவரை உங்கள் எதிர்கால வாழ்வு நரகமே என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். காதலித்து விட்டேன். அவனைத் திருத்த முடியும் என்று நீங்கள் நம்பினால், அதை நடத்தி காட்டும் தைரியம் உங்களிடம் இருக்கின்றதா என்னும் நம்பிக்கையைப் பரிசீலனை செய்து பாருங்கள்.

திருமணம் செய்துவிட்டீர்களா? குடும்ப வாழ்க்கை சிக்கலானது. பொறுப்புக்கள் நிறைந்தது. அதேபோல் இப்பிறப்பும் அழகானது. அதை சிக்கல் நிறைந்ததாக மாற்றி வாழும் காலம் முழுவதும் மகிழ்ச்சி இல்லாது, அழுது புலம்பி இப்படியே இருந்து இறந்து விடுவோம் என்றுமட்டும் எண்ண வேண்டாம்.

தொடர்ச்சி 22ம் பக்கம்...




புலம்பெயர் எழுத்தாளர் திருமதி கௌசி சிவபாலன் அவர்களின் முக்கோண முக்குளிப்பு நூலின் அறிமுக விழா கொழும்பு தமிழ்சங்கத்தில் 28.09.2016 சிறப்பாக இடம்பெற்றது.




# யாழ்ப்பாணத்து வாழ்வியலில் பஞ்சாங்கம்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா



யாழ்ப்பாணத்து இந்துத் தமிழ்மக்களின் வாழ்வியலோடு பஞ்சாங்கப் பாரம்பரியமும் பின்னிப் பிணைந்துள்ளது. பஞ்சாங்கம் என்பது திதி, கரணம், நட்சத்திரம், யோகம், வாரம் என்னும் ஐந்து அங்கங்களைக் கொண்டது. யாழ்ப்பாணத்திலே 1667 இல் அராலி இராமலிங்க ஐயர் என்பவர் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கணித்தார் என்று கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகளின் ஜோதிடப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக இதனைக் கொள்ளலாம் போலத் தெரிகிறது. பிற்காலத்திலே வேறுசில பஞ்சாங்கங்களும் அவ்வப்போது தோன்றி மறைந்தன என்று கூறப்படுகின்றது. (தும்பளை சுப்பிரமணிய சாஸ்த்திரிகளும் ஒரு பஞ்சாங்கத்தைக் கணித்து வெளியிட்டார் என்று கூறுவர்.)

வாக்கிய பஞ்சாங்கத்தைத் தவிர திருக்கணித பஞ்சாங்கம் என்ற பஞ்சாங்கமும் யாழ்ப்பாணத்திலே கணிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. இங்கு பயன்பாட்டில் இருந்துவரும் பஞ்சாங்கங்களுக்கு இடையே கணிப்பு முறையில் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் காணப்படுகின்றன.

இரகுநாதையரின் வாக்கிய பஞ்சாங்கத்தை துணைக்கொண்டே இதனை எழுதுகின்றோம். எமது பண்பாட்டில் நாளாந்த வாழ்க்கையில் பஞ்சாங்கம் பெறும் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அறுபதாண்டுத் தொடர்ச்சியின் சுற்று வட்டத்திலே பஞ்சாங்கம் கணிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் இலங்கையின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் வெளிநாடுகளில் இருந்தாலும் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தத் தவறுவதில்லை. இதனாலேதான் வருட ஆரம்பத்தில் வெளியிடப்படும் பெரும்பாலான கலண்டர்களும் பஞ்சாங்கக் கலண்டர்களாக வெளி வருகின்றன. சாதாரண மக்கள் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்துவதற்கும் ஜோதிடர்கள் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்துவதற்குமிடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. சாதாரண மக்களின் பயன்பாட்டுப் பகுதியையே இங்கு நோக்குவோம்.

வருஷப் பிறப்புக்குச் சில நாட்களுக்கு முன்னரே புதுவருடத்திற்குரிய பொருட்களை வாங்கும்பொழுது பெரும்பாலானோர் பஞ்சாங்கத்தையும் வாங்கிவிடுவதுண்டு. புதுவருடத்தில் நீராடப் பயன்படுத்தும் மருத்துநீருக்குரிய பொருட்களை அறிவதிலும் ஆதாயவிரயம் என்னும் வரவு செலவை அறிவதிலும் கைவிசேஷம் பற்றி அறிவதிலும் சாதாரண மக்கள் ஆர்வமாக இருப்பர்.


# யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்

ஓரளவுக்குப் படித்தவர்கள், தமிழாசிரியர்கள் பஞ்சாங்கத்தின் பலன்கள் பற்றிக் கலந்துரையாடுவதும் விவாதிப்பதும் இற்றைக்கு முப்பது - நாற்பது வருடங்களுக்கு முன் வழக்கமாக இருந்தது. இன்று இந்த வழக்கம் மிக அருகிவிட்டது. பெரும்பாலும் சாதாரண மக்கள் பஞ்சாங்கத்திலே இடம்பெறும் பல்லிசொற் பலன், காகம் கரையும் பலன், பல்லிவிழும் பலன், கனவின் பலன், பிரயாணத்திற்கு விலக்கப்பட்ட சகுனம் முதலியவற்றிலேதான் கவனம் செலுத்தி வந்தனர்.

இம்மக்களிடையே நிலவிவந்த நம்பிக்கைகளுக்குப் பஞ்சாங்கங்கள் அங்கீகாரம் கொடுத்ததா? அல்லது பஞ்சாங்கம் குறிப்பிட்டவைகள் மக்கள் மத்தியிலே நிலைபெற்றனவா? என்பன பற்றிய ஆய்வுகள் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. மக்கள் மத்தியிலே பாரம்பரியமாக நீண்டகாலமாக நிலவிவந்த நம்பிக்கைகளே பஞ்சாங்கம் மூலம் பதிவாகின எனக்கொள்வதே பொருத்தமாகும். மேலே குறிப்பிட்ட நம்பிக்கைகள் பற்றிய தனித்தனி நூல்களும் (பெரிய எழுத்து நூல்கள் உட்பட) ஐம்பதுகள்வரை யாழ்ப்பாணத்திலே பயின்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், இன்று பெரும்பாலானோர் இந்த நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மக்கள் மத்தியில் வழங்கிவரும் நம்பிக்கைகள் பற்றிய சமூகவியல் ஆய்வு சுவையானதாகும். சமய, சமூக, பொருளாதார, அரசியல் நடைமுறைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் நிறையத் தொடர்புகள் உண்டு.

இலக்கியங்களிலும் குறிப்பாக நாட்டார் இலக்கியங்களிலும் நாடகங்களிலும் மேலே குறிப்பிட்ட நம்பிக்கைகள் பதிவாகியுள்ளமையை அவதானிக்கலாம். உதாரணமாக நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் "ஆடுகதறியது" என்பதில் இடம்பெறும் "காக்கை கரைவும் கனவும் பலித்ததெடா" எனத் தொடங்கும் பாடலையும் சுட்டிக்காட்டலாம். நம்பிக் கைகள் மக்கள் வாழ்வுடன் ஒன்றியமைக்கு இவை சான்றாகும்.



## பல்லி சொன்னதும் பலன் பார்க்கும் ...

பல்லி சொன்னதும் அல்லது உடலிலே பல்லி விழுந்ததும் உடனே பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்க்கும் வழக்கம் இற்றைக்கு 40-50 ஆண்டுகளுக்கு முன்னே சர்வசாதாரணமாக இருந்தது. நம்பிக்கைகளுக்கும் ஜோதிடத்திற்கும் உள்ள உறவினைப் பஞ்சாங்கங்கள் பலப்படுத்தின.

நாள், நட்சத்திரம் பார்த்தல்: நாள், நட்சத்திரம் பார்த்தல் என்னும் விடயத்திலே இன்றும் பஞ்சாங்கங்கள் முதன்மை வகிக்கின்றன. மக்கள் வாழ்வில் இடம்பெறும் முக்கியமான விடையங்களுக்குரிய நாள், நட்சத்திரம், திதி முதலானவற்றைப் பஞ்சாங்கங்கள் விரிவாகவே குறிப்பிடுகின்றன.

தொடர்ச்சி 24ம் பக்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இயற்க்கை ஆயுள்வேத ஐரோப்பிய நாடுகளுக்கு உகந்த
கேரளா இயற்க்கை மருத்துவம்
இந்தியா ஈரோடு - இலங்கை நல:லூர் - பிரான்ஸ் லாகூர்நெவ்
தொலைபேசி இல : 00919842256223
குருநாந் ராம் லக்ஸ்மன்
இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,
கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.



Gartenstrasse 185, 41236 Mönchengladbach - Germany
0049 1517-5230649 // 0049 1521-8215707

தலைவலி
காய்ச்சல்
சரவாங்கி
இரத்தக்கொதிப்பு
வாயுக் கோளாறு
உஷ்ணம்
நரம்புவாதம்
அல்சர்
வயிற்றுவலி
இடுப்புவலி
காக்காவலிப்பு
ஆண்மைகுறைவு
வெட்டைச்சூடு
ஜனசுடு
உள்மூலம்
வெளிமூலம்
பகந்தரிமூலம்
கை-கால் குடைச்சல்
கழுத்துவலி
முகப்பரு
தேமல்
வெண்குஷ்டம்
டிபி
வாதம்
மஞ்சள் காமாலை
கண்,காது
தொண்டை நோய்கள்

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

# மரத்துடன் மனங்கள்

-சுருதி



படங்கள்: வெற்றிமணி

இரவின் பனியில் நனைந்த 'அக்பர்' பாலத்தின்மீது, நான்கு பெண்கள் நடுங்கியபடி பொறியியல்பீடம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

மகாவலி நதிக்குக் குறுக்காக இரண்டு தூண்களின் உதவியுடன் கம்பீரமாக நிற்கும் அந்தப் பாலம் இடிந்து விழக்கூடும் என்ற நடுக்கம் அல்ல அது. எதிராக வந்து கொண்டிருக்கும் ஐந்து ராக்கிங் பூதங்களைக் கண்டுவிட்ட பயப்பீதி அது.
"பெயர்களை ஒவ்வொருத்தராகச் சொல்லுங்கள்!"
"பரமேஸ்வரி, கௌசி, பல்லவி, தாரினி"

இந்த விளையாட்டு கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வருகின்றது.
"பல்லவி மாத்திரம் இதிலை நிக்கலாம். மற்ற மூண்டு பேரும் எங்களோடை வாருங்கள்" சொல்லிவிட்டு அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்த பூதங்களில் நான்கு போயின.

கருணா மாத்திரம் பல்லவியுடன் நின்றான். சந்தித்த முதல்நாளே கருணாவின் கண் அவள்மீது பட்டுவிட்டது.

ஹந்தான மலைச்சாரலில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளிக்கற்றைகள் பல்லவியின் மீது படர முகம் ஜோராக ஜொலித்தது. சினிமாப்படங்களில் வருவது போல தென்றல் அவள் கேசங்களைச் சிலிர்க்க வைத்தது. பல்லவி குள்ள உருவம் என்றாலும் அழகுராணிதான். இரட்டைப்பின்னலை முன்னாலே தூக்கி வாகாக வீசியிருப்பாள். அதில் கருணாவின் மனம் ஏறி இருந்து ஊஞ்சல் ஆடும்.

"என்னைத் திருமணம் செய்வாயா?" நிஜத்தைப் பகிடியாகத் திரித்து கேள்வியாக்கித் தூது விட்டான் கருணா.

"நான் என்ரை அப்பா அம்மா சொல்லுறபடிதான் கேட்பேன்" ஒவ்வொரு தடவையும் இப்படிச் சொல்லி சிரித்து மழுப்பி விடுவாள் அவள்.

"அப்ப உன்னுடைய பெற்றோர் என்னைத் திருமணம் செய்யச் சொன்னால் செய்வாயா?" இந்தத் தடவை ஒரு தீர்க்கமாகவே வந்திருந்தான் கருணா.

அவள் நிலத்தைக் கீறி பாலத்தை நோக வைத்தாள். இவன் மகாவலியைப் பார்த்து மகா வலியில் துடித்து நின்றான்.

"சரி... நீ யாரையாவது எப்பவாவது விரும்புவதாக இருந்தால், என்னிடம் தான் முதலில் சொல்ல வேண்டும்" அப்படியொரு திட்டத்தைப் போட்டுவிட்டு, அவளின் பெற்றோர்களைச் சந்திக்கலாம் என்பது கருணாவின் எண்ணம்.

"சரி என்றால் இந்த இடத்தைவிட்டுப் போகலாம். இல்லாட்டி பின்னேரம் உன்ரை கூட்டாளிகள் வரும்வரைக்கும் நானும் நீயும் இதிலைதான்."
பல்லவிக்கு தற்காலிகமாகத் தப்பித்துக் கொண்ட புளுகம்.

பாலத்தின் ஒரு கரையில் இருந்து மறுகரைக்குத் தாவி, அந்த வழியே ஓடினாள். அவளின் ஓட்டத்தினால் 'அக்பர்' பாலம் குலுங்கியது.


இந்த 'அக்பர்' பாலம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. அது பொறியியல் பீடத்தையும் ஏனைய அனைத்துப் பீடங்களையும் இணைக்கும் பாலம். 'அக்பர் ஹோலையும்' ஏனைய அனைத்து விடுதிகளையும் இணைக்கும் பாலம்.
அடுத்த தடவை சந்திக்கும்போது, "இந்தா பிடி என்ரை அட்றஸ்" என அவளின் கையிற்குள் தனது முகவரி அடங்கிய துண்டொன்றைத் திணித்து அவளின் கையைத் தீண்டினான் கருணா. எப்பொழுதாவது காதல் கடிதம் எழுதுவாள் என்பது அதன் உள்நோக்கம்.
முதல் வருடம் ஜேம்ஸ்பீரிஸ் ஹோலில் இருந்த காலங்களில் கருணாவும் அவன் கூட்டாளிகள் தவராஜா, நேசன், குலம் போன்றவர்களும் செய்யும் சேஷ்டைகள் பலவாறாக இருந்தன. ஜேம்ஸ்பீரிஸ் ஹோல் மலையில் இருந்தது. அதன் ஒரு அந்தத்தில், கலஹா வீதியை நோக்கி சீமெந்தினால் ஆன ஒரு இருக்கை இருந்தது. அதில் இருந்து கீழே பார்த்தால் கிஷிங் பெண்டும் (kissing bend), எட்டத் தூரப் பார்த்தால் லவ்வேர்ஸ் பார்க்கும் (lovers park) தெரியும். மாலை வேளைகள் ப்ளஸ் விரிவுரைகள் இல்லாத சமயங்கள் இவை இரண்டும் போதை தரும். பைனாக்குலர் கொண்டு லவ்வேர்ஸ் பார்க்கை தரிசிக்கும் குறுகுறுப்பு சொல்லமுடியாதது.

லவ்வேர்ஸ் பார்க்கிற்கு சோடி சோடியாக காதலர்கள் வந்து, ஒரு சோடிக்கு மற்றச் சோடி தெரியா வண்ணம் மரவேர்களில் அமர்வார்கள். ஒருவர் கையை மற்றவர் கோர்த்து ஊஞ்சலாடுவார்கள். செக்கியூரிட்டி கூடத் தேவைப்படும் காலங்களில் குடையும் கூடவரும். குடையின் கீழ் அவர்கள் காட்டில் மழைதான். இந்தக் காட்சிகளை பார்ப்பதற்கு, பைனாகுலர் சூடாகும்வரை அங்கு ஒரு போட்டி நடக்கும். லவ்வேர்ஸ் பார்க்கிற்குள் இனவிரோதம் மதவிரோதம் என்றெல்லாம் நடந்தமாதிரிப் பல்கைக்கழகச் சரித்திரத்தில் இல்லை. அங்கே எல்லாம் சமத்துவம்தான். சமரசம் உலாவும் இடம்தான் அது.
ஆறேழு மாதங்கள் கழிந்திருக்கும். ஒருநாள் முதலாம் ஆண்டு மாணவன் ஒருவனுடன், பாலத்தருகே சடைத்து வியாபித்திருக்கும் மரத்தின் பின்னால் பல்லவி ஒதுங்குவதை தவராஜா கண்டுவிட்டான். எட்டிப் பார்த்த தவராஜாவின் தவம் கலைந்து போனது. ஏகப்பட்ட சோடிகள் பட்டாம்பூச்சிகளாக சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தனர்.

கருணாவின் காதில் நெருப்பை ஊதிப் பற்ற வைத்தான்.
"எட விசரா.... அவள் யாரை விரும்பினாலும் என்னட்டைப் பெர்மிஷன் கேட்பேன் என்று சத்தியம் செய்து தந்திருக்கின்றாள்" என்றான் உள்ளூரப் பதட்டத்துடன்.
அவள் தன்னுடன் படிக்கும் சகமாணவன் குகநேசனுடன் சுற்றுகின்றாள் என்று ஒரு வதந்தி உலாவியது. சத்தியமா அது வதந்திதான் என கருணா அடித்துச் சத்தியம் செய்தான்.

தொடர்ச்சி 18ம் பக்கம்







றஜினா தருமராஜா

# பெற்றோரை விட்டு விலகி இருக்க ரீனேஜ் பிள்ளைகள் விரும்புகிறார்களா?

பெற்றோரை விட்டு விலகி இருக்க, நான் கேள்விகள் கேட்ட ஒரு பிள்ளையும் விரும்பவில்லை.
ஆனால் சில தருணங்களில் நினைத்திருக்கிறார்களாம்.....

பெற்றோருடன் இருப்பது எந்த பிள்ளைக்கும் நல்லதொரு பாதுகாப்புத் தான். பிரச்சினைகள் வரும்போது, அவற்றை எப்படி தீர்த்துக் கொள்வது என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். உரையாட, சந்தோசங்களையும் கவலைகளையும் பற்றிப் பேச இவர்கள் மட்டும் தான் இருப்பார்கள்.
பாடசாலைக்குச் சென்று வீடு வந்தடைந்தால், அன்போடு அரவணைக்க அம்மாவும் அப்பாவும் இருப்பார்கள்.

இவ்வுணர்வும் சந்தோசமும் பெற்றோர்களைப் பிரிந்து இருந்தால் கிடைக்குமா? நாங்கள் செய்யும் தவறுகளைப் பொறுத்து பிள்ளைகளைச் சரியான வழியில் கொண்டுவருவதற்கு எவ்வளவு செய்கிறார்கள்.

பிள்ளைகளுக்காக மட்டுமே கடினமாக உழைத்து வாழ்ந்து வருபவர்கள் தான் தாயும் தந்தையும். அவர்களை விட்டு நாங்கள் விலகலாமா? விலகியிருந்தால் கிடைக்க வேண்டிய அன்பும் அரவணைப்பும் இல்லாமலே போய்விடும்.
எங்களுக்கு உருதுணையாக இருப்பவர்களை விட்டு விலகலாமா?

பெற்றோர்களை விலகி இருக்க சில காரணங்கள்.... ஆம், பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள், பிள்ளைகளுக்குச் ”சுதந்திரம்” கொடுப்பதில்லை. நண்பர்களுடன் வெளியே செல்ல விடுவதில்லை. ஏனென்று பெற்றோரிடம் கேட்டால் பயம் என்கிறார்கள். தங்களை தாமாகவே பாதுகாத்துக்கொள்ளவும் பழகவேண்டும் அல்லவா. ஒவ்வொரு முறையும் பெற்றோர்கள் சேர்ந்து வரமாட்டார்கள்.

பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்களுடன் இரண்டு மூன்று நாட்கள் பயணம் செய்வதற்கு விடுவதில்லை. இக்காரியங்கள் எல்லாம் பிள்ளைகளுக்கு வெறுப்பு உண்டாக்கும். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள நெருக்கம் உடைந்து போய்விடும். தயவு செய்து பெற்றோர்கள் ஆகிய நீங்கள் இப்படி செய்யாதீர்கள். பிள்ளைகள் வழியில் சென்று அவர்கள் பிழையான பாதைக்குச் செல்லாதவாறு செயற்படுங்கள்.

தொடர்ச்சி 15 ம் பக்கம்






# நீங்கள் கேட்டவை!

அன்று வானொலியில் நீங்கள் விரும்பிக் கேட்ட பாடல்களை ஒலிபரப்பவதுபோல், இன்று நீங்கள் விரும்பிக் கேட்கும் காரை தயாரித்து வழங்க காலம் கனிகிறது.
BMW நிறுவனமானது நுண்ணறிவுள்ள எதிர்கால காரொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.



குறித்த காரானது லண்டனில் இடம்பெற்ற கண்காட்சியின் போதே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த காரானது மிகவும் அருமையான வகையில் உருவாக்கப் பட்டுள்ளதுடன் 2040 இல் சந்தையில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள



போதிலும் அதற்கான கேள்வியானது தற்போதே அனைவரிடமும் நிலவி வருகின்றது.

இதேவேளை, எதிர்காலத்தில் அவர்கள் அறிமுகப் படுத்தவுள்ள தானியங்கி கார் மாதிரிகளும் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்தும் வண்ணம் அவர்களின் விருப்பத்திற் கேற்ப கார்களை நிர்மானிக்கும் திட்டமானது நடைமுறைப்படுத்தப் படுமெனவும் தெரிவித் துள்ளது.

## பெற்றோரை விட்டு விலகி இருக்க....

**14ம் பக்க தொடர்ச்சி....**

சிலர் பிள்ளைகளை தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் வெளிநாட்டவருடன் மட்டுமே பழக விடுகிறார்கள். இதனூடாகப் பிள்ளைகள் எங்களின் தமிழ்ப்பண்பாட்டினை மறந்து வேறு வழிக்குச் செல்கிறார்கள். வெளிநாட்டவர்கள் போல் பெற்றோர்களைப் பிரிந்து இருக்க நினைக்கிறார்கள்.
பதினெட்டு வயது வந்தவுடன் தனியாக இருக்க நினைக்கிறார்கள்.

தமிழ் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் எங்கள் கலாச்சாரங்களையும் பண்பாட்டையும் தெரிந்து புரிந்து கொண்டு நடக்கிறார்கள்.

பிரிந்து தனியாக இருக்கும்போது தான் பெற்றோர்கள் பட்ட கஷ்ரங்கள் பற்றி சிந்திக்கத் தோன்றும். ஆம். பெற்றோர்கள் இல்லாமல் சிறுவயதில் தனியாக வாழ்வது கடினம் என்பது அவர்கள் உணர்வார்கள். தனியாகச் சமைக்கும் போதும் எல்லா வீட்டுவேலைகளும் செய்யும் போதும் மற்றும் அன்பு பாசம் காட்டுவதற்கு ஒருவரும் இல்லையென்று உணரும் போதும் தான் தெரியும் பெற்றோர்களின் அருமை.

தனியாக இருக்கும் போது இந்த உலகினை வேறு விதமாகப் பார்க்கத் தோன்றும்.
பெற்றோர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுத்தும், கண்டித்தும், வெளிவநாட்டுக் கலாச்சாரத்தை மட்டும் தெரிந்து கொள்ள விடாமல் தமிழ் கலாச்சாரத்தையும் கற்று உணர விடுங்கள்.

பிள்ளைகளே! நீங்கள் பெற்றோரின் கஷ்ர துன்பங்களை உணர்ந்து அவர்களுக்கு மேலும் கஷ்ரம் கொடுக்காதீர்கள்.





Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com






தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

# சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.

09

சேவியர்

# அழுத்தமற்ற மனமே அழகானது!



மன அழுத்தம். இன்று எல்லா இடங்களிலும் பரவலாகப் பேசப்படக்கூடிய விஷயம் இதுவாகத் தான் இருக்கும். பேசறவங்க பேசிட்டுப் போகட்டும் என விட்டு விடவும் முடியாது. காரணம் இன்று உலகிலுள்ள நோய்களில் 75 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை நோய்களுக்கான காரணம் இந்த மன அழுத்தம் தான் என்று சொல்லி அசரடிக்கிறது அமெரிக்க ஆராய்ச்சி ஒன்று.

மன அழுத்தத்துக்கான காரணங்கள் இவ்ளோ தான் என பட்டியலிட்டுச் சொல்லிவிட முடியாது. ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, வேலை, குடும்பம் இப்படி மன அழுத்தத்துக்கான காரணிகள் நீண்டு கொண்டே போகும். ரொம்ப சத்தம், அதிக வெளிச்சம் இதெல்லாம் கூட சிலருடைய மன அழுத்தத்தை சகட்டு மேனிக்கு அதிகரித்து விடும் என்கின்றனர் மருத்துவர்கள்.

மன அழுத்தம்னா என்ன ? எனும் கேள்விக்கும் மிகச் சரியான பதிலைச் சொல்லிவிட முடியாது. நம்மை வெளியிலிருந்தோ, உள்ளிருந்தோ தாக்குகின்ற பிரச்சினைகளுக்கு நமது உடலும் மனமும் தருகின்ற பதில் தான் இந்த மன அழுத்தம் என்பது மருத்துவ விளக்கம். டென்ஷன், எரிச்சல், கோபம், கவனமின்மை, சோர்வு, குழப்பம், வேகமான இதயத் துடிப்பு என இந்த மன அழுத்தத்தின் பிள்ளைகள் எக்கச்சக்கம்.

இந்த மன அழுத்தங்களை மொத்தமாகக் கொட்டி நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். முதலில் வருவது யூ-ஸ்ட்ரெஸ்.சட்டென உங்களுக்கு ஒரு லாட்டரி அடித்ததென்று வைத்துக் கொள்ளுங்கள் ? உங்களுக்கு எப்படியிருக்கும் ? அந்த வகை மன அழுத்தம் இந்த வகையில் வருகிறது. படிப்பில் சாதனை செய்வது, தம்பதியர் பெற்றோராவது, கார் வீடு போன்றவை வாங்குவது, விடுமுறைக்கு பிடித்தமான இடத்துக்குச் செல்வது, அல்லது ஒரு திக் திக் திகில் படம் பார்ப்பது. இப்படிப்பட்ட விஷயங்களுக்காய் வருகின்ற அழுத்தம் இந்த வகை. இந்த மன அழுத்தம் கொஞ்சம் சமர்த்து !

இரண்டாவது வகை மன அழுத்தம் டிஸ்ட்ரெஸ் எனப்படுகிறது. திடீரென நேர்கின்ற ஒரு மரணம். பணச் சிக்கல்கள், வேலைப் பழு, உறவுகளுக்கிடையே வருகின்ற சிக்கல், உடல்நலமின்மை போன்றவற்றினால் வருவது தான் இந்த வகை மன அழுத்தம். ரொம்பவே சிக்கலை உண்டாக்கும் இந்த வகை மன அழுத்தத்தை அதன் கால அளவை வைத்து அக்யூட் அல்லது குரோனிக் என இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள். அக்யூட் என்றால் கொஞ்ச நேரம் இருக்கும் மன அழுத்தம். குரோனிக் என்பது நீண்ட கால மன அழுத்தம்

ஹைப்பர்ஸ்ட்ரெஸ் என்பது மூன்றாவது வகை. ஒரு மனிதனை அவனுடைய இயலாமையின் எல்லை வரை தள்ளிக் கொண்டே போனால் நிகழ்வது தான் இந்த மன அழுத்தம். வீட்ல பிள்ளைகளைக் கவனித்துவிட்டு, அலுவலகம் ஓடி வேலை செய்து, மீண்டும் வீட்டுக்கு வந்து குடும்பத்தைக் கவனிக்கும் குடும்பத் தலைவிகளுக்கு சர்வ சாதாரணமாய் வருகின்ற மன அழுத்தம் இது. வருகின்ற பணத்தை வைத்துக் கொண்டு வாடகை கொடுக்கவா, குழந்தைகளைப் படிக்க வைக்கவா, சாப்பிடவா என திணறித் திரியும் வறுமைக் கோட்டில் தொங்கிக் கொண்டிருக்கும் மக்களில் பலர் இந்த மன அழுத்தத்தில் வாழ்பவர்கள் தான்.

இன்னொரு வகை மன அழுத்தம் ஹைப்போஸ்ட்ரெஸ் எனப்படும். இது கொஞ்சம் வித்தியாசமான மன அழுத்தம். “என்னய்யா ஒரேமாதிரி வேலையைச் செய்து செய்து போரடிக்குது” என்பவர்களின் மன அழுத்தம் இந்த வகையானது. இவர்களிடம் உற்சாகமோ, சாதிக்கும் வேகமோ, சுறுசுறுப்போ இருக்காது.

அமெரிக்கன் அகாடமி ஆ.ஃப் ஃபேமிலி பிஸிசியன்ஸ் அமைப்பு நடத்திய ஆய்வு ஒன்றில் 89 சதவீதம் மக்கள் தங்களுடைய வாழ்வில் கடுமையான மன அழுத்தத்தைச் சந்தித்திருந்தார்கள் எனும் அதிர்ச்சித் தகவல் வெளியானது. நடுவயது நபர்கள் இத்தகைய கடுமையான மன அழுத்தத்தில் இருந்தால் அவர்களுக்கு உணர்வு ரீதியான நட்பு ரொம்ப அவசியமாம். இல்லையேல் அவர்கள் ஏழு ஆண்டுகளுக்குள் மரணமடையும் வாய்ப்பு அதிகம் என அதிர வைக்கிறது இந்த ஆய்வு.

மன அழுத்தம் பல்வேறு நோய்களைக் கொண்டு வந்து சேர்க்கிறது. தலை வலி முதல், நெஞ்சு வலி வரை ஏகப்பட்ட நோய்களுக்கும் மன அழுத்தம் காரணமாகி விடுகிறது. தாய்மை நிலையிலிருக்கும் பெண்களுக்கு மன அழுத்தம் வந்தால் அது குழந்தைகளையும் நேரடியாய்ப் பாதிக்கும் என குண்டைத் தூக்கிப் போடுகிறார் அமெரிக்காவின் மருத்துவர் மாயோகிளினிக்ஸ்.

நகைச்சுவை உணர்வு இருப்பவர்களுக்கு மன அழுத்தம் எளிதில் வராது. சிலர் எல்லா விஷயங்களையுமே இலகுவாக எடுத்துக் கொள்வார்கள். தேடித் தேடி சிரிப்பவர்கள் அவர்கள். இவர்களுக்கு மன அழுத்தமே இருக்காது என்கிறார் மனோதத்துவ நிபுணர் லீ பெக்.

மன அழுத்தம் குறித்து ஆராய்ச்சிகள் செய்த சார்லஸ் ஸ்விண்டால் என்ன சொல்கிறார் தெரியுமா ? “ மன அழுத்தத்தை சூழ்நிலைகள் பத்து சதவீதமும், அதை நாம் எப்படி அணுகுகிறோம் என்பது 90 சதவீதமும் நிர்ணயிக்கின்றன” என்கிறார். அதாவது மன அழுத்தம் வேண்டுமா ? வேண்டாமா என முடிவெடுக்க வேண்டியது நாம் தான் என்பது அவருடைய தீர்மானமான முடிவு.









உதாரணமாக, குடும்பத்தில் பிரச்சினை வந்தால் “எல்லாமே உன்னால தான்” என தப்பைத் தூக்கி அடுத்தவர் தலையில் போடாமல், “நமக்கு ஒரு பிரச்சினை வந்திருக்கு, அதை எப்படித் தீர்ப்பது என்று பார்ப்போம்” என அமைதியாய் அணுக வேண்டும். பிரச்சினைகளைத் தோண்டாமல், தீர்வுகளைத் தேடுவது மன அழுத்தமற்ற சூழலுக்கு உத்தரவாதம் என்கிறார் பிரபல அமெரிக்க உளவியலாளர் வில்லார்ட் எ∴ப் ஹார்லே.

இந்த மன அழுத்தம் சர்வதேச அளவில் எல்லோரையும் பின்னிப் பிணைந்திருப்பதால் தான் ஸ்ட்ரெஸ் மேனேஜ்மெண்ட் எனப்படும் மன அழுத்தத்திலிருந்து விடுபடும் பயிற்சிகளுக்கும் பஞ்சமில்லை. மென்பொருள் நிறுவனங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ, ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ ஊழியர்களை சுற்றுலா, விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள், சிரிப்பு நிகழ்ச்சிகள் என ஏதாவது செய்து உற்சாகமூட்டுகின்றன.



உலக பிரபலங்களின் பட்டியலை எடுத்துப் பாருங்கள், கடுமையான மன அழுத்தத்தில் உழன்று அதிலிருந்து வெளிவந்தவர்கள் எக்கச் சக்கம். வின்ஸ்டன் சர்ச்சில், பிரபல நாவலாசிரியர்கள் அகதா கிறிஸ்டி, ஜே.கே ரௌலிங், இளவரசி டயானா, பிரிட்னி ஸ்பியர்ஸ், பெயிண்டிங் பிதா மகன் வான்கோ, ஆபிரகாம் லிங்கன், மார்டின் லூதர், மைக்கேல் ஏஞ்சலோ, ஐசக் நியூட்டன், லியோ டால்ஸ்டாய் என இந்தப் பட்டியல் ரொம்பவே பெருசு. மன அழுத்தத்தைத் தாண்டி வரலாறு படைக்க முடியும் என்பதன் சான்றாக இவர்களெல்லாம் நமக்கு தன்னம்பிக்கை ஊட்டுகிறார்கள்.

**மன அழுத்தத்திலிருந்து விடுபட பத்து கட்டளைகள் இவை.**

கடைசி நிமிட பரபரப்பை நிறுத்துங்கள். எங்காவது செல்ல வேண்டுமெனில்




ஒரு அரை மணி நேரம் முன்னதாகவே கிளம்புவது. காலையில் ஒரு பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே எழுந்து விடுவது. பயணத்துக்குத் தேவையானவற்றை முந்தின நாளே எடுத்து வைத்துக் கொள்வது போன்றவற்றை வழக்கமாக்குங்கள்.

ஒரு நேரம் ஒரு வேலையை மட்டும் செய்யுங்கள். எட்டு வேலைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டு ஒன்பதாவது வேலையைச் செய்து கொண்டிருந்தால் உங்கள் மன அழுத்தம் அதிகரிக்கும். என்ன செய்ய வேண்டும் என்பதைப் பட்டியலிடுங்கள். மிக முக்கியமான விஷயங்களை முதலில் செய்யுங்கள். எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை! போதுமான ஓய்வு நேரம் உங்கள் பட்டியலில் நிச்சயம் இருக்கட்டும்.

உங்களுக்கு மன அழுத்தம் தரக்கூடிய விஷயங்களை ஒதுக்குங்கள். இரைச்சல், வெளிச்சம், தாமதம், சில வகை வாசனைகள், சில நபர்கள் இத்யாதி..இத்யாதி என இந்தப் பட்டியல் எவ்வளவு பெரியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். முடிந்தவரை ஒதுக்குங்கள். ஒதுக்க முடியாத சூழல்களில் நீங்களே கொஞ்சம் ஒதுங்கிப் போய் விடுங்கள்.

உடற்பயிற்சி செய்யுங்கள். ஆரோக்கியமான உடல் மன அழுத்தத்தின் எதிரி. உடலில் இரத்த ஓட்டமும், ஆக்ஸிஜன் ஓட்டமும் சீராக இருக்கும் போது உடலில் மன அழுத்தம் வரும் வாய்ப்பு குறைகிறது. எனவே மூச்சுப் பயிற்சி போன்றவையும், வாக்கிங், ஜாகிங் போன்றவையும் உங்கள் தினசரி வேலையில் இடம் பெறட்டும்.

தீய பழக்கங்களைக் கைகழுவி விடுங்கள். புகை மது, போதை போன்றவை மன அழுத்தத்தை அதிகரிக்கும் காரணிகள்.
எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். திருப்தியடையும் மனநிலை இருந்தால் வாழ்க்கை அழகாகும். குழந்தைகளுக்கு மன அழுத்தம் வருவதில்லை. காரணம் அவர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை.

ஒரு நல்ல பொழுதுபோக்கைக் கைவசம் வைத்திருங்கள். உங்களுக்கு ரொம்பவே பிடித்த விஷயமாய் அது இருக்கட்டும். உங்களுடைய மனதை உற்சாகமாகவும் ஆனந்தமாகவும் வைத்திருக்க அது உதவும். குழந்தைகளுடன் விளையாடுவது. செல்லப்பிராணிகளுடன் விளையாடுவது என தினமும் கொஞ்ச நேரம் செலவிடுங்கள்.

பாசிடிவ் சிந்தனைகளை மனதில் கொண்டிருங்கள். நடந்து முடிந்த நிகழ்வுகளின் மோசமான பக்கத்தை அடிக்கடி நினைத்துக் கொண்டிருக் காதீர்கள்.

சின்னச் சின்ன வெற்றிகளைக் கூட கொண்டாடுங்கள். சின்னச் சின்ன வெற்றிகளின் கூட்டுத் தொகையே பெரிய வெற்றி என்பதை மனதில் எழுதுங்கள்.

பிறருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பது தேவையற்ற மன அழுத்தத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். அவர்களுடைய வெற்றி, தோற்றம், அந்தஸ்து, பணம் என எதை ஒப்பிட்டாலும் அது உங்களுக்கு மன அழுத்தத்தையே தரும்.

**அழுத்தமற்ற மனது இனி**
**வெற்றிகளே உனது**

AMMA's food
ammas-food.de
டோர்ட்மூண்ட் நகரில் ...
அம்மா'ஸ் உணவகம்
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து ரொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!
அம்மாஸ் உணவகத்தின்
சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத்
தருவதும் ஆகும்.
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!
Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!


Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93





13ம் பக்க தொடர்ச்சி....

# மரத்துடன் மனங்கள்

## "அக்பர்" பாலத்தின்மீது,

-சுருதி

ஒருநாள் குகநேசனை இடைமறித்து,

"உன்னுடன் படிக்கும் பெண்களில் யார் அழகு?" என்று அவனிடம் ஒரு கணிப்பீடு செய்தான் கருணா.
"பல்லவிதான் நல்ல முகவெட்டு" என்றான் அப்பாவித்தனமாக குகநேசன்.
"முகவெட்டோ? அவளுக்குப் பின்னாலை அலைஞ்சியோ உன்ரை முகத்தை வெட்டுவன்" என்றான் கருணா.

அதன்பின்னர் கொஞ்சக் காலம் அவன் அவள் பின்னால் சுற்றவில்லை.

ஒருநாள் குகநேசன் ஒரு பெண்ணைத் தள்ளிக் கொண்டு லவ்வேர்ஸ் பார்க்கிற்குள் பரபரவென மின்னி மறையும் வேகத்தில் நுழைந்ததை தவராஜா கண்டுவிட்டான். அன்று கருணாவிற்கு நல்ல காலம். கூட வரவில்லை. மறைந்து மறைந்து குலமும் தவராஜாவும் வேறும் சிலரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.
"குகநேசன் போனாப் போகட்டும். பெம்பிளைப்பிள்ள யாரெண்டு பார்க்க வேணுமல்லே!"

அவர்களுக்குத் தண்ணி காட்டியபடி சென்ற இவர்களில் குலம் ஒரு மரத்துடன் மோதிவிட்டான். குலம் போட்ட சத்தத்தில், மரத்தின் பின்னால் இருந்த ஒரு சிங்களச் சோடி மரணத்தின் வாசலுக்குச் சென்றுவிட்டது. அவன் கத்தத் தொடங்கினான். காதலி அருகில் இருந்தால் ஒரு ஆணுக்கு வரும் ஆக்ரோஷஉணர்வை அவர்கள் தரிசித்தார்கள்.

"இஞ்சை சோடியில்லாமல் தனியாகவோ கூட்டமாகவோ வரப்படாது" கல்லுகளைத் தூக்கி இவர்கள்மேல் வீசத் தொடங்கினான் அவன்.

அந்தச் சத்தம் கேட்டு பல்லவி எட்டிப் பார்த்தாள். இவர்கள் பல்லவியைக் கண்ட அதிர்ச்சியில், கழிவுச் சாக்கடைக்குள்ளால் ஓடி சரிவு மீது ஏறித் தப்பித்தார்கள்.

அன்று இரவு அவர்கள் அவசர அவசரமாக ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். மந்திராலோசனை செய்தார்கள். தவராஜாதான் கூட்டத்திற்கும் ராஜா. இதை எல்லாம் அறிந்தால் கருணா இப்ப தூக்கு மாட்டிச் சாகப் போறானே எனப் பயந்தார்கள். ஒரு திட்டம் தீட்டினார்கள். யாரின் கையெழுத்து ஒரு பெண்ணின் மணிமணியான கை எழுத்தைப் போல வரும் எனச் சோதனை செய்தார்கள்.

இரண்டுநாட்கள் கழித்து விசிலடியுடன் விரிவுரைக்கு வந்த கருணாவை காலை பதினொரு மணியின் பின்னர் ஒருவரும் பார்க்கவில்லை. மாலை விரிவுரைகள் முடித்து வந்த, அவனின் றூம்மேற் துஸ்யந்தன் கதவைத் திறந்தபோது அறை இருட்டாக இருந்தது. கட்டிலில் தலை வரைக்குப் போர்த்தபடி பேய்க் கோலத்தில் கருணா படுத்துக் கிடந்தான்.
"என்ன மச்சான் சுகமில்லையோ?" என நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான் துஸ்யந்தன்.

"அது உள் காய்ச்சல்" என்றான் கருணா.

அவனால் அந்தக் கொடுந்துயரத்தைத் தாங்க முடியவில்லை. கடைசியில் அந்தக் கடிதத்தை துஸ்யந்தனிடம் கொடுத்துவிட்டு ஓவென்று அழுதான்.

அன்புடன் கருணா அண்ணனுக்கு,

வணக்கம்.

உங்களுக்கு என்னுடன் படிக்கும் குகநேசன் என்பவரைத் தெரியும் என நினைக்கின்றேன். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மனதார விரும்புகின்றோம். நீங்கள் முன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் தகவலை உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

இனிமேல் என்னைப் பார்ப்பதற்கு விடுதிக்கு வரவேண்டாம். வழியில் தனியே கூப்பிட்டுக் கதைக்காதீர்கள். உங்கள் தங்கையாக ஏற்றுக்கொண்டு எங்கள் இருவரையும் வாழ்த்துங்கள்.

நன்றி அண்ணா.
அன்புள்ள
பல்லவி குகநேசன்.
"நாசங்கட்டு கலியாணம் முடிய முதலே அவனை கணவனாக்கிப் போட்டாள்" என்று சத்தமிட்டபடியே கருணாவிற்கு தேறுதல் சொல்லிவிட்டு கன்ரீனுக்கு சாப்பிடப் போனான்.

"உனக்கு ஏதாவது வேணுமா மச்சான்?"

"ஏதாவது பார்த்து ஒரு சாப்பாட்டுப் பார்சல் வாங்கி வா"

துஸ்யந்தன் கன்ரீனில் இருந்து வரும்போது பார்சலுடன் மட்டும் வரவில்லை, ஒரு பட்டாளத்துடன் வந்தான்.

எல்லாரும் செத்தவீடு கொண்டாடினார்கள். கடிதத்தை அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்தார்கள்.

"மச்சான் விடு. விட்டுத் தள்ளு. என்ன இருந்தாலும் உனக்கு மதிப்பு மரியாதை தந்திருக்கிறாள் பல்லவி. நீ கேட்டபடி கடிதம் போட்டிருக்கின்றாள். அதுவே உனக்குப் போதும்" என்றான் குலம். அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போது தவராஜா குலத்தின் முதுகில் கிள்ளினான்.

"என்ன மச்சான் பல்லவியின்ரை கையெழுத்தும் உன்ரை கையெழுத்தும் ஒண்டாப் பொருந்துது போல கிடக்கு" என்று குலத்தின் காதிற்குள் கிசிகிசுத்தான் துஸ்யந்தன்.
குலம் தன் வாயில் சுட்டுவிரலை வைத்து 'உஸ்' என்றான்.




# "பெர்முடா முக்கோணம்" நிலவிவந்த மர்மம் வெளியானது உண்மை!








பலகாலமாக நிலவிவந்த பெர்முடா முக்கோணம் தொடர்பான மர்மம் தற்போது நீங்கியுள்ளது.

குறித்த பகுதியில் பயணிக்கும் கப்பல்கள் மற்றும் விமானங்கள் என்பன மாயமாய் மறைந்து உலக மக்களிடையே பீதியை உண்டாக்கின.

அட்லாண்டிக் பெருங்கடலில் சுமார் 5,00,000 சதுரடி பரப்பளவில் பெர்முடா முக்கோணம் அமைந்துள்ளது.

Miami Puerto Rico மற்றும் பேர்முடா தீவுக்கிடையில் அமைந்துள்ள பிரதேசம் பெர்முடா முக்கோணம் என அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசத்துக்குள் செல்லும் விமானங்கள், கப்பல்கள் உட்பட எந்தவொரு சிறிய பொருள் கூட உள்நுழையமுடியாத அளவுக்கு இப்பிரதேசம் நீண்டகாலம் மர்மமான பிரதேசமாகவே இருந்துவந்துள்ளது.

இந்நிலையில் தற்போது இது தொடர்பாக அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று ஆய்வொன்றை மேற்கொண்டு இதற்கான காரணத்தை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து ஸ்டீவன் மில்லர் என்ற ஆராய்ச்சியாளர் தனது கருத்துக்களை முன்வைத்தார், 'பெர்முடா முக்கோணப்பகுதியில் நிகழும் மர்மத்திற்கு அங்குள்ள மோசமான காலநிலை தான் காரணம்' என இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெர்முடா முக்கோணப் பகுதிக்கு மேலிருக்கும் மேகக்கூட்டங்கள் அறுகோண வடிவில் வினோதமாகக் காணப்படுவதாகவும், இவை 32 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரை பரந்திருப்பதாகவும், இவையே அப்பிரதேசத்தில் வெடிகுண்டுச் சூறாவளியை உருவாக்கிக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மேகத்தில் உருவாகும் இந்தச் சூறாவளிக் காற்றானது, 273 கிலோமீற்றர் வேகத்தில் கடலைநோக்கி வீசுவதால் அப்பிரதேசத்தில் பயணம் செய்யும் விமானங்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் கடலில் மூழ்கின்றன.

காற்று கடற்பரப்பின் மீது வேகமாக மோதும்போது சுமார் 45 அடி உயரத்திற்கு அலை எழுவதால் அவ்வழியாக செல்லும் கப்பலுக்கும் இதே நிலை ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

## அடுப்படி 17



புவனம் தர்மரட்ணம்

# சத்தான ரவை இட்டலி

**தேவையான பொருட்கள்**

ஒரு தேய்கரண்டி வெந்தயம்
இரவை 500. கிறாம்
உழுத்தம் பருப்பு 250.கிறாம்
உப்பு தேவையான அளவு
பீற்றூற் 25.கிறாம்
கரற் 50.கிறாம்
வல்லாரை ஒரு கைபிடி அளவு




**செய்யும் முறை**

உழுத்தம் பருப்பையும்
வெந்தயத்தையும் நன்றாகக் கழுவி
நான்கு மணி நேரம் ஊற வைத்து
போதுமான தண்ணீர் விட்டு நைசாக அரைத்து வைக்கவும் ரவையையும் 20-30 நிமிடம் Steam பண்ணி ஆறியவுடன் உழுத்தம் மாவையும் கலந்து இட்டலி பதத்திற்கு கெட்டியாக குழைத்து புளிக்க வைக்கவும்.

புளித்த மாவிற்கு உப்பு சேர்த்து கலந்த பின் மூன்று பங்காகப் பிரித்து வைக்கவும். பீற்றூற்,கரற்,வல்லாரையை தனித் தனியே பேஸ்ராக அரைத்து ஒவ்வொரு பங்கிலும் அரைத்து வைத்த பேஸ்ரை கலந்து இட்டலித் தட்டில் மாவை தனித் தனியே விட்டு, அவிந்ததும் ஆற வைத்து இந்தக் கலர் இட்டலியை அழகு படுத்தி வைத்து குழந்தைகளுக்குப் பரிமாறவும்

குழந்தைகளும் கலரைப் பார்த்து விரும்பி சாப்பிட்ட மாதிரியும் இருக்கும் சத்தான உணவுமாகிறது.

S.J. ASIAN - AFRO STORE



Mannheim
S1 - 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

Ludwigshafen
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de

Indo-Afro
Indo Afro Travels
68161 Mannheim




# எயிட்ஸ் நோய்

பெறப்பட்ட நோய்த்தடுப்பாற்றல் குறைபாடுகளின் நோய்க்கூட்டறிகுறி அல்லது பெறப்பட்ட மனித நோய் எதிர்ப்புத் திறன் குறைபாட்டு நோய்க்கூட்டறிகுறி (Acquired immune deficiency syndrome) என்பது எச்.ஐ.வி எனப்படும் மனிதனின் நோய் எதிர்ப்பாற்றல் குறைப்பு செய்யும் திறன் கொண்ட தீ நுண்மத்தால் (iturhy;) ஏற்படுகிற ஒரு நோயாகும்

உலக எய்ட்ஸ் நாள் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நாள் எய்ட்ஸ் நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. எய்ட்ஸ் நாள் பற்றிய எண்ணக்கரு முதலாவதாக 1988 இல் நடைப்பெற்ற, எய்ட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர் மாநாட்டில் உருவானது. அதன் பிறகு அரசுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பில் எயட்சிர்க்கான உலகளாவிய நிகழ்ச்சியின் பொது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தாமஸ் நெட்டேர் எனும் இருவரால் 1987-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டதே உலக எய்ட்ஸ் தினம். தங்கள் யோசனையை எயிட்சிர்கான உலகளாவிய நிகழ்ச்சியின் இயக்குனர் முனைவர் ஜோனதன் மன்னிடம் கொண்டு சென்றனர் இருவரும். முனைவர். மன்னுக்கு இது பிடித்து போகவே, அவர் இதை அங்கீகரித்து, 1988-ஆம் ஆண்டு டிசம்பர் ஒன்றாம் நாளை உலக எய்ட்ஸ் தினமாக கடைபிடிக்க பரிந்துரை செய்தார்.எச். ஐ.வி.'.எய்ட்ஸ்க்காக கூட்டு ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சி 1996-ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்தது, மேலும் இதுவே உலக எய்ட்ஸ் தினத்திற்கான திட்டம் மற்றும் ஊக்குவிப்பை செய்தது. ஒரே நாளில் செய்வதற்கு பதிலாக1997-ஆம் ஆண்டு இந்நிகழ்ச்சி உலக எய்ட்ஸ் பிரச்சாரத்தை உருவாக்கி,அதன் மூலமாக வருடம் முழுவதும் செய்திப் பரிமாற்றம்,தடுப்பு மற்றும் கல்வி வழங்கின.

முதல் இரண்டு வருடங்களில், எய்ட்ஸ் தினத்திற்கான கருப்பொருள் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரையே சுற்றி இருந்தது. எய்ட்சால் அவதியுருபவர்கள் மற்றும் ஹெட்ச்.ஐ.வியால் பாதிக்கப்படுபவர்கள் எல்லா வயதினருமே என்பதனால் இந்த கருப்பொருள்கள் பின்பு கடினமாக எதிர்க்கப்பட்டன. 2004-ஆம் ஆண்டு உலக எய்ட்ஸ் பிரச்சாரம் ஒரு சுதந்திர சங்கமாக மாறியது. ஒவ்வொரு வருடமும், போப்பரசர்கள் இரண்டாம் ஜான் பால் மற்றும் பதினாறாம் பெனெடிக்ட் உலக எய்ட்ஸ் தினத்தன்று நோயாளிகள் மற்றும் மருத்துவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வெளியிடுவார்கள்.

**நோக்கம்**

எயிட்சு மேலும் பரவாமல் தடுக்கவும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தான் உலகளாவிய இந்த தினத்தின் நோக்கமாகும். எயிட்சு பாதிப்புக்கு உள்ளானவர்களின் உணர்வுகளை மதிக்கவும் அவர்களின் உரிமைகளை மதிக்கவும் மக்களை பழக்குவதும் இதன் முக்கிய குறிக்கோளாகும். "கல்வி மற்றும் விழிப்புணர்வு" மட்டுமே எயிட்சு தடுப்பிற்க்கான சிறந்த மற்றும் சரியான சமூக மருந்து என்பதை உணர்ந்து விழாக்கள், நாடகங்கள், நாட்டியங்கள் ஆகியவற்றில் எயிட்சு தடுப்பு மற்றும் விழிப்புணர்வு அம்சங்களை இடம் பெற செய்து மக்களுக்கு விழிப்புணர்வு கருத்துகளை பரப்ப செய்வதே இந்நாளின் நோக்கமாகும். எச் ஐ வி பாதிப்பின் விவரங்கள் எச் ஐ வி பாதிப்புக்குள்ளான மக்களை அதிகம் கொண்டுள்ள இரண்டாவது நாடு இந்தியா ஆகும். 35 % எயிட்சு நோயாளிகள் 15 முதல் 24 வயதிற்கு உட்பட்டவர்களே. 86 % பாதுகாப்பு அற்ற உடலுறவின் மூலமாகவும், 4 % எச் ஐ வி தொற்று உள்ள கர்ப்பிணிகளின் மூலமாகவும், 2%சரியாக சுத்தம் செய்யப்படாத ஊசிகளை பயன்படுத்துவதின் மூலமும், 2 % பரிசோதனை செய்யப்படாத ரத்தத்தின் வழியாகவும், மீதி 6 % பிற காரணங்களாலும் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது. (NACO 2004).

**வரலாறு**

எயிட்சு முதன்முதலாக ஜுன் 5, 1981 இல் அமெரிக்க நோய்க்கட்டுப்பாட்டு மையங்களில் (CDC) கண்டறியப்பட்டது. இம்மையங்கள் (CDC) லாஸ் ஏஞ்சல்ஸின் 5 ஓரினச்சேர்க்கையாளர்களிடையே நியுமோசிஸ்டிஸ் கரினியை நிமோனியாவைக கண்டுபிடித்தது [120]. இப்பொழுதும் PCP என்றே வகைப்படுத்தப்பட்டு நியுமோசிஸ்டிஸ்ஜிரோவேசியையால் உண்டாவதாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் இந்நோய்க்கான அதிகாரப்பூர்வ பெயர் CDC யிடம் இல்லாத காரணத்தால் இதனுடன் தொடர்புடைய நோய்களின் பெயரை வைத்து (எடுத்துக்காட்டாக நிணநீர்ச்சுரப்பி நோயான லிம்படினோபதி) இந்நச்சுயிரிக்குப் பெயரிட்டனர் இதன் கண்டுப்பிடிப்பாளர்கள். காபோசியின் சதைப்புற்று மற்றும் சந்தர்ப்பவாத நோய்த்தொற்றுக்கள் என்ற பெயரும் இதற்கிடப்பட்டு 1981 இல் அப்பெயரில் ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. பத்திரிகையாளர்களிடையே GRID (ஓரினச்சேர்கையாளர்களோடு தொடர்புடைய நோயெதிர்ப்புக் குறைபாடு) என்று பெயரிடப்பட்டது. CDC பெயர் தேடி அலைந்த பின்னர் நோயுற்ற சமுதாயங்களைப் பார்த்து "4H நோய்" (ஹைதியைச் சேர்ந்தவர்கள்,ஓரினச்சேர்க்கையாளர்கள், இரத்தம் உரையா மையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஹெராயின் பயன்படுத்துபவர்கள்) என்று பெயரிட்டது எனினும் எயிட்சு ஓரினச்சேர்க்கையாளர்களுக்கு மட்டும் உரியதல்ல எனக் கண்டறிந்த பின்னர் "கிரிட்" (GRID) என்ற சொல் பொருத்த மானதாகத் தோன்றாத காரணத்தால் 1982 ஜுலையில் எயிட்சு என்ற சொல் அறிமுகப்பட்டது. செப்டம்பர் 1982 க்குள் CDC எயிட்சு என்ற பெயரை உபயோகப்படுத்த ஆரம்பித்து இந்நோய்க்கு சரியான விரிவாக்கத்தை அளித்தது.எயிட்சு நோய் பரவல் பிந்தைய 1950 களில், பெல்ஜியத்தின் காங்கோவில், ஹிலாரிகோப்ரொவ்ஸ்கியின் போலியோமையலைடிஸ் தடுப்பூசிக்கான அசட்டையான ஆய்வின் பொழுது ஆரம்பித்து வைக்கப் பட்டதாகும் என பலத்த சர்ச்சைக்குள்ளான தேற்றமான OPV எயிட்சு கருதுகோள் தெரிவிக்கிறது. விஞ்ஞானிகளுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த விவரம் கிடைக்கும் ஆதாரங்களால் உறுதி செய்யப்படவில்லை.

எச் ஐ வி ஆப்பிரிக்காவிலிருந்து ஹைதிக்குச் சென்று அங்கிருந்து அமெரிக் காவுக்குச் சென்றிருக்கலாம் என்று அண்மைய ஆய்வொன்று தெரிவிக்கிறது. எச் ஐ வி கிருமி கமரூன் நாட்டில் இருந்த சிம்பன்சியை மனிதன் வேட்டையாடி அதை வெட்டும் போது சிம்பன்சியின் இரத்தம் அதை இறைச்சிக்காக வெட்டிய மனிதனின் கையில் இருந்த காயம் மூலம் பரவியிருக்கலாம் என கருதப்படுகிறது. எய்ட்ஸ் நோயின் தோற்றம் பற்றி ஆராய்ச்சிகளை நடத்திய மேற்குலக விஞ்ஞானிகள் 1920களில் காங்கோ மக்களாட்சிக் குடியரசு நாட்டில் கின்ஷாஸா நகரில் இருந்துதான் ஹெச்.ஐ.வி கிருமி பரவ ஆரம்பித்தது என்று கூறுகின்றனர். பெறப்பட்ட நோய்த்தடுப்பாற்றல் குறைபாடுகளின் நோய்க்கூட்டறிகுறி அல்லது பெறப்பட்ட மனித நோய் எதிர்ப்புத் திறன் குறைபாட்டு நோய்க்கூட்டறிகுறி (Acquired immune deficiency syndrome) என்பது எச்.ஐ.வி எனப்படும் மனிதனின் நோய் எதிர்ப்பாற்றல் குறைப்பு செய்யும் திறன் கொண்ட தீ நுண்மத்தால் (வைரசால்) ஏற்படுகிற ஒரு நோயாகும்.

தொடர்ச்சி 26 ம் பக்கம்

மங்கல இசைக் குழு
நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன் நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Mob: 0049 157 89 15 95 71






Telefon: +49 2151 3259152-Fax: +49 2151 3259153- Mobil: +49 1726835790
16 வருட அனுபவம் மிக்க சேவையாளர்
உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்
Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld
Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan



# குட்டைப் பாவாடைப் பெண்

## சந்திரவதனா

பலத்த காற்றும், சிணுங்கும் மழையும், மரங்கள் சொரிந்த இலைகளை தெரு முழுவதும் இழுத்துக் கொண்டு திரிந்த அந்தக் குளிர்ந்த இரவில் அவள் அந்தத் தரிப்பிடத்தில் காத்திருந்தாள். பேருந்து நிற்க முன்னரே குட்டைப் பாவாடையுடன் பளிச்சென்று தெரிந்த அவளைக் கண்டு சில கண்கள் அகல விரிந்தன. பேருந்தினுள் அவள் ஏறியதும் ஒட்டு மொத்தப் பேரூந்துப் பயணிகளின் பார்வைகளும் அவள் பக்கம் ஒருதரம் திரும்பின. அவள் என்னைத் தாண்டும் போது "ஹலோ" என்ற படி அழகாகச் சிரித்துக் கொண்டாள். தாண்டிய பின்னும் தாண்டாமல் நின்ற, அவள் விட்டுச் சென்ற கமகமக்கும் உயர்தர வாசனைத் திரவியம் என்னுள் ஒருவித சந்தோச உணர்வைத் தோற்றுவித்தது.

ஆண்களில் சிலர் ஒரு தரம் அவளைத் திரும்பிப் பார்த்து விட்டு, எட்டாத கனி என்ற பாவனையுடன் அமைதியானார்கள். பெண்களில் கூடச் சிலர் திரும்பிப் பார்த்தார்கள். ஆடையின்றிய ஒரு பெண்ணின் முன் 100 வீதமான ஆண்களின் கண்களும் அகல விரிந்து கொண்டன என்று எங்கோ, எப்போதோ வாசித்த ஞாபகம். அதே புத்தகத்தில் இருந்த இன்னொரு செய்திதான் என்னுள் அதிகப்படி வியப்பை ஏற்படுத்தியது. ஆடையின்றிய பெண்ணின் முன் 80 வீதமான பெண்களின் கண்களும் அகல விரிந்து கொண்டனவாம்.
குறிப்பாக பெண்களின் மார்பகங்கள் பெண்களையே வியக்கவைக் கின்றனவாம். இந்த செய்தி எந்தளவுக்கு உண்மையானது என்பதில் எனக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. ஆனால் இப்போது குட்டைப் பாவாடையின் கீழ் பளிச்சென்று தெரிந்த இவளது தொடைகள்தான் அந்த ஆண்களைத் திரும்ப வைத்தன என்றால், பெண்களை எது திரும்ப வைத்திருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

நானே ஒரு மனிதஜென்மமாக ,இருக்கும் போது, சில சமயங்களில் நான் தள்ளி நின்று மற்றைய மனிதர்களைப் பார்த்து எனக்குள்ளே நகைத்துக் கொள்வேன். ,இன்றும் அப்படியொரு நகைப்பு எனக்குள். ,இந்த மனிதர்கள்தான் எவ்வளவு பலவீனமானவர்கள். நான் மட்டும் ,இதற்கொன்றும் விதிவிலக்கல்ல. ஆனாலும் ,இன்று கொஞ்சம் அதிகமான நகைப்பும், மனிதர்கள் பற்றிய ஆய்வும் எனக்குள்.

அந்தக் குட்டைப் பாவாடைப் பெண் பன்னிரண்டு வயதுகள்வரை எனது கடைசி மகனுடன்தான் படித்துக் கொண்டிருந்தாள். ,இப்போதுதான் எனக்குள் எப்படித் தொடர்வது, என்ற குழப்பமான சிந்தனை குறுக்கிடுகிறது.
அப்போது பல தடவைகள் எங்கள் வீட்டுக்கும் வந்திருக்கிறான். சில தடவைகள் எனது சமையலைச் சுவைத்தும் இருக்கிறான். கடைசியாக வந்த போது நான் ஸ்பக்கற்றியும் (spaghetti) தக்காளி ஹசோஸ்´சும் செய்து கொடுக்க, சீஸ் துருவலை அதற்கு மேலே தூவி தனக்கு மிகவும் பிடித்த உணவு என்று சொல்லிச் சந்தோசமாகச் சாப்பிட்டு விட்டுச் சென்றான்.
அதற்குப் பின் ,இருவருடங்களாக அவ்வப்போது வீதிகளில் மட்டுந்தான் நான் அவனைச் சந்தித்தேன். படிப்பில் சற்று பின் தங்கி வகுப்பேற்றப் படாமல் எனது மகனை விட ஒரு வகுப்பு கீழே நின்று விட்டான். பின்னொரு சமயத்தில் மகன் சொன்ன அந்தச் செய்தி என்னை அதிர்ச்சி அடைய வைத்தது.

வெறுமே புத்தகங்களிலும், பத்திரிகைச் செய்திகளினூடுந்தான் பிறப்பிலே ஆணான ஒருவன் சத்திர சிகிச்சைகள் மூலம் பெண்ணாவது பற்றி அறிந்து வைத்திருந்தேன். ,இவனுக்கும் ஆணாக ,இருப்பதில் ,இஸ்டமில்லையாம். பெண்ணாகப் போகிறானாம்.

,இதெல்லாம் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்ற சிந்தனை என்னுள் ஒருவித நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் ஆகும் என்பதற்கு அறிகுறியாக, முதற்படியாக, முதல் முதலாக அவனை மேக்அப்புடன் பெண்ணுடையுடன் கண்டேன். அப்போதும் கூட முழுவதுமான நம்பிக்கை எனக்கு வரவில்லை.

இப்போது அவன் பெண். கண்டவர்களைச் சுண்டி ,இழுக்கும் படியாகக் கவர்ச்சியாக உடையணிந்து, கண்ணுக்கு மை தீட்டி, உதட்டுக்கு சாயம் பூசி...

இந்தக் குளிருக்குள்ளும் கால்கள் பளபளக்கும் படியான காலுறை அணிந்து... ,இனி ,இவன் என்றோ, அவன் என்றோ நான் விழிக்க முடியாத படி, இவளாகி விட்டவன்.



இந்தக் குளிருக்குள்ளும்
கால்கள் பளபளக்கும்
படியான காலுறை அணிந்து... ,

அவனுக்கு 18வயதான போது சத்திரசிகிச்சை செய்து முழுவதும் பெண்ணாக மாறிக் கொண்டான். அவன் உணர்வுகள் அப்படி ,ருப்பதால் அவன் மாறியே ஆக வேண்டும் என்று அவனது மருத்துவரே சிபாரிசு செய்ய, மருத்துவத்திற்கான சலுகைகளை முழுவதுமாகப் பெற்றுக் கொண்டு பெண்ணானான்.

,இப்போது 24வயதுகள் ஆகி விட்ட ,இவளது முன்சரித்திரம் பலருக்கும் தெரியாது.

,இவள் வேலை செய்யும் சுப்பர் மார்க்கட்டில் ,இவளைத் தாண்டிச் செல்லும் ஆண்களில் பலர் ,இவளது புன்சிரிப்பில் தடுமாறுவதும் அடிக்கடி நடப்பதுண்டு.
,இருந்தும் ஸ்ரெபான் ஆக ,இருந்து தற்போது ஸ்ரெபானி ஆகி விட்ட ,இவளது குடும்ப வாழ்க்கை எப்படி அமையப் போகிறது என்பது, எப்போதும் போல என்னிடம் கேள்விக் குறியே!

நன்றி. மன ஓசை




நீங்கள் ஆயிரக்கணக்கான யூரோக்கள் நிதி நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களா?

01522 7565934
0231 58695276
rajeevan.mahalingam@swisslife-select.de

நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?

வீட்டுக்கடன்: 1,13 % லிருந்து
வங்கிக் கடன்: 1000 € = 1,65 € மாத வட்டி

11 ம் பக்கத் தொடர்ச்சி...

## திருமணத்தை எதிர் நோக்கியிருக்கும் பெண்களே

பொறுப்புக்களும் பொறுமையும் மனிதனுக்கு இருக்க வேண்டியது அவசியமே. அது கணவன் மனைவி இருவருக்கும் அவசியமானது. பிரச்சனை என்று வரும் போது பேசித் தீர்க்கும் மனநிலை இருவருக்கும் அவசியம். மனம் திறந்து இருவரும் பேசும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். குற்றம் யாரிடம் உள்ளதோ மன்னிப்புக் கேட்கும் மனநிலை அவரிடம் இருக்க வேண்டும். குற்றத்தை யாராக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளும் நல்ல மனம் தேவை. எதையும் ஆற அமர இருந்து சிந்திக்கும் குணம் வேண்டும். ஆத்திரம் அறிவைக் கெடுக்கும். சிறுவிடயத்தைக் கூட ஆறுதலாக ஏற்றுக் கொள்ளாது, ஆத்திரப்பட்டு காட்டுக் கூச்சல் போடுவதும் காது கிழியக் கத்துவதும், கூட இருக்கும் குடும்பத்தினரைப் பாதிப்பதுடன் இக்குணம் அனைவரையும் பற்றிக் கொள்ளும். குடும்ப அமைதி சீரழிந்து போகும். மனநிலையில் பாதிப்பு ஏற்படும். எனவே பொறுமைசாலிகளை தேடிக்கொள்ளுங்கள்.

தேடல் நிறைந்த வாழ்வில் எதிர்பார்ப்புக்கள் நிறையவே இருக்கும். கணவன் தன்னைத் தாங்க வேண்டும் என்று மனைவியும், மனைவி தன்னைத் தாங்க வேண்டும் என்று கணவனும் நினைப்பது இயற்கை. அவர்கள் ஆசைக்கேற்ப சின்னச் சின்னப் பரிசில்களை அல்லது அரவணைப்பை இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அன்பும் ஆதரவும் இல்லை என்றால் ஏக்கம் இருவர் மத்தியிலும் இருப்பதுடன் இடையில் சிறிய இடைவெளி வந்துவிடும். எனவே உங்களுக்காக ஏங்கும் ஒரு பொருத்தத்தைத் தேடுங்கள்.

முயற்சி இல்லாத ஒரு மனிதனால் தன்னையும் தன் குடும்பத்தையும் மகிழ்ச்சியில் வைத்திருக்க முடியாது. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பொறுமையுடன் கையாளத் தெரிந்திருக்க வேண்டும். காலத்தைக் குறைகூறி காரியத்தைக் கைவிட்டு விடக்கூடாது. வாழ்க்கையை முன்னிலைக்குக் கொண்டுவரும் எண்ணமே நோக்கமாக இருக்க வேண்டும். கையில் இருக்கும் பணத்தைக் கரைப்பதை விட பெருக்குவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அடுத்தவர்களை விட நானே நம்பர் 1 என்னும் எண்ணத்தை மனதில் பதிக்க வேண்டும். அவர்களே முன்னேறத் துடிப்பவர்கள். மமதையை விட்டு மனங்களைப் போற்றி வாழ்வில் முன்னேற்றம் காணும் பொருத்தத்தைத் தேடுங்கள் வாழ்வில் மகிழ்ச்சி காண்பீர்கள்.

பணத்தை மட்டும் குறியாகவும் பாசத்தை ஒரு சிறு பகுதியாகவும் கொள்ளும் பொருத்தமும் வாழ்க்கையில் கசப்பை ஏற்படுத்தும். உண்மைப்பாசம் மனதில் இருந்தால் மனைவி பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்கும் மனநிலை கணவனுக்கு ஏற்படும். அதனால் உண்மை அன்பைத் தேடிப்பெறுங்கள். எனது குடும்பம், எனது வாழ்க்கை, எனது குடும்பத்தின் மகிழ்ச்சி என்று எண்ணும் பொருத்தத்தை பொறுமையாகத் தேடுங்கள்.

வாழ்க்கை முறியாது வாழ வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்கள் கண்கள், அறிவு ஆராய்ச்சி கொள்ளட்டும். முயன்று வெல்லுங்கள். பிறகு பார்த்துக் கொள்வோம் என்று அசட்டையாக விட்டுவிட்டீர்களேயானால் வாழ்க்கை சூனியம். அதிலிருந்து மீளமுடியாது. பிரிந்து வாழுகின்றபோதும் மனதில் பெரிய சுமையுடனே வாழ்வீர்கள். சமுதாயத்திடையே கரை பூசப்பட்டவர்களாவே காணப்படுவீர்கள். உங்களிடம் உள்ள உண்மை, அதாவது சரியான தீர்மானம் யாருக்கும் புலப்படாது. உங்களிடமுள்ள குறைகளே பேசப்படும். நிறைகள் வீசப்படும். அதனால் பின் வரும் பழியைவிட முன் வரும் பழி மேலானது.

ஒருமுறையே வாழ்கின்றோம். அதை இன்பமாக வாழுங்கள்.




### அப்பா! நீங்கள் சொல்வது சரிதான்.

கனகரத்தினம் குடிச்சுப் போட்டு தெருவுக்கு தெரு விழுந்து கிடப்பார்.

பிள்ளைகள் அவரின் போதை தெளிவித்து உணவு குடுத்து,

“அப்பா இனிமேல் எங்கட மானத்தை வாங்காதையுங்கோ” என்பார்கள்.

“என்ரை நாலு பிள்ளையளையும் படிப்பிச்சு நல்ல பண்புகளோடு வளர்த்து விட்டிருக்கிறன்.

எனக்கு நீங்கள் அறிவுரை சொல்ல வேண்டாம்” தந்தையார் சொல்ல,

”அதாலைதான் நீங்கள் என்ன கூத்தாடினாலும் நாங்கள் உங்களை வடிவாகப் பாக்கிறம்”

என்றார்கள் பிள்ளைகள்.







யாழ். கொக்குவில் குளப்பிட்டியில் 20.10.2016 வியாழக்கிழமை இரவு பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்தில் இறந்த பல்கலைக்கழக மாணவன் சுலக்சன் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகன்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

# மாணவி வித்தியா கொலை வழக்கிற்கு நீதி கிடைக்காதது போல் எமது மாணவர்களுக்கும் நீதி கிடைக்காமல் போவதை தவிர்க்க வேண்டும்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மாணவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை யாழ் பல்கலைக்கழகத்திலுள்ள எந்தவொரு பீடங்களுமோ கல்விச் செயற்பாடுகளோ நடைபெறமாட்டாது என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இன்று 24.10.2016 திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் சார்பாக கலைப்பீட மாண வர் ஒன்றியத் தலைவர் கந்தசாமி ரஜிவன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது இறந்த இரு மாணவர்களுக்கும் (இந்த விபத்துச் சம்பவத்தில் அளவெட்டி கந்தரோடை பகுதியைச் சேர்ந்த சுகந்தராசாசுலக்சன் (வயது 24) மற்றும் 155 ஆம் கட்டை கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த நடராசாகஜன் (வயது 23) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.)
நட்டஈடு வழங்கப்பட வேண்டும், சிறுவயதிலிருந்து அவ்விரு மாணவர்களையும் வளர்ப்பதற்கு ஏற்பட்ட செலவையும் அவ்விரு மாணவர்கள் வேலை செய்வதன் மூலம் கிடைக்கின்ற தொகையையும் அவ்விரு பெற்றோர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையை மாதாந்தம் வழங்க வேண்டும்.

மாணவி வித்தியா கொலை வழக்கிற்கு நீதி கிடைக்காதது போல் எமது மாணவர்களுக்கும் நீதி கிடைக்காமல் போவதை தவிர்க்க வேண்டும்.

அமைதி வழியில் மேற்கொள்ளப்படும் இப்போராட்டத்திற்கு நீதி கிடைக்காதுவிடின் வேறு வடிவங்களில் போராட்டம் திசை திருப்ப ப்படும். எமது மாணவர்கள் இப்போதும் கொந்தளிப்புடனேயே உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவருடைய உரையை சிங்கள மொழியில் சட்ட பீட மாணவன் சாமர, ஆங்கிலத்தில் மருத்துவ பீட மாணவ ஒன்றியத் தலைவர் ஏ.அலெக்ஸ் ஆகியோர் வாசித்தனர். நன்றி: உதயன்

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Tamil- Deutsch
Deutsch- Tamil

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com






12 பக்கத் தொடர்ச்சி

## யாழ்ப்பாணத்து வாழ்வியலில் பஞ்சாங்கம்...



### மாட்டுக்குக் குறிசுடவும் பஞ்சாங்கம்

அந்த வருடத்திற்குரிய சுபமுகூர்த்தங்கள் ஒவ்வொரு வருடப் பஞ்சாங்கத்திலும் பல பக்கங்களிலே அச்சிடப்பட்டிருக்கும். குறிப்பாகக் கைவிசேஷம், விருந்து, குரு, ராஜ, பிரபு தரிசனம், வித்தியாசாலை ஆரம்பம், வயல், தோட்டச் செய்கை, நெல் விதைத்தல், தோட்டப் பயிர்கள் நாற்றிடுதல், நடுதல், தென்னை மா, பலா முதலியன நடுதல், வெற்றிலைக் கொழுந்து நடுதல், கிழங்குவகை, வெங்காயம் நடுதல், வாழை, கரும்பு மரவகை நடுதல், புகையிலை, தேயிலை, கீரை நாற்றிடுதல் - நடுதல், வியாபாரந் தொடங்குதல், புதுக் கணக்குப் பதிதல், புதிரெடுத்தல், தானியம் கொண்டு வருதல், சூடு வைத்தல், சூடு மிதித்தல், மாட்டுக்குக் குறிசுடல், நலமடித்தல், மாட்டுக்கு நுகம் வைத்தல் - பழக்குதல், அன்னப்பிராசனம் (சோறு தீத்துதல்), கப்பல், தோணி, பாய்மரம் நிறுத்தல், கிணறு, குளம் தோண்டல், சீமந்தம், காதுகுத்தல், தீட்சை உபநயனம், வித்தியாரம்பம், திருமாங்கல்யத்துக்குப் பொன் உருக்குதல், விவாகப்பதிவு, நிச்சயதார்த்தம், விவாகம், வீடுகட்டுதல், குடிபுகுதல், தேவப்பிரசஷ்டை, வீடு வேய்தல், ஓலை வெட்டுதல், வேலி அடைத்தல், முதலானவற்றைச் செய்வதற்குறிய சுபமுகூர்த்தங்கள் (திகதி,வாரம், காலம், நேரம், இலக்கினம் முதலியன) பற்றிப் பஞ்சாங்கம் விரிவாகக் கூறிச்செல்கின்றது.

பஞ்சாங்கம் குறிப்பிடும் சுபமுகூர்த்தங்களுக்குரிய பட்டியலைப் பார்க்கும்பொழுது மக்களின் வாழ்வியலோடு முகூர்த்தங்கள் எவ்வாறு இணைந்திருந்தன என்பதைத் தெளிவாக அறியமுடிகின்றது. ஜோதிடக் கலையை அனுசரிக்கும் பஞ்சாங்கக் குறிப்புக்களுக்கும் வானியலுக்கும் உள்ள உறவினையும் சுபமுகூர்த்தங்கள் புலப்படுத்தி வருகின்றன. சுபமுகூர்த்த நிர்ணயத்திலே கிரக சஞ்சாரம் முதன்மை பெறுகின்றது என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

வேகமும் பரபரப்பும் நிறைந்த வாழ்க்கைச் சூழலிலே காலத்தோடு போட்டிபோட்டு வாழும் மக்கள் எல்லாவற்றிற்குமுரிய முகூர்த்தங்களை நடைமுறைப்படுத்துவது கடினமானதே.

மேலே சுட்டிக்காட்டிய சுபமுகூர்த்தங்களிலே தடித்த எழுத்திலுள்ள சுபமுகூர்த்தங்களே பெரும்பாலும் இன்று வழக்கிலுள்ளன. இந்துக்கள் அல்லாத சிலரும் முற்குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு நல்ல நாள் பார்ப்பதை யாழ்ப்பாண சமூகத்திலே இன்றும் காணலாம். பஞ்சாங்கம் குறிப்பிடும் சுபமுகூர்த்தங்களிலே பலவற்றை (மாட்டுக்குக் குறிசுடல், சூடு வைத்தல், ஓலை வெட்டுதல், வேலியடைத்தல் முதலானவை) இன்றைய தலைமுறையினர் பலர் அறிய மாட்டார்கள். சமூக மாற்றம், கல்வி, தொழில், உலகத்தொடர்பு முதலான காரணிகளால் பல தொழில்கள் மறைந்துவிட்டன. எனினும் பஞ்சாங்கத்திலே அவை நிலைத்து நிற்கின்றன.

இற்றைக்கு 40 - 50 வருடங்களுக்கு முன்னர் பஞ்சாங்கம் எல்லா வீடுகளிலும் இருப்பதில்லை. ஒரு கிராமத்தில் ஒருவரிடம்தான் பஞ்சாங்கம் இருக்கும். குறிப்பாக ஜோதிடரிடமும் அக்கிராமத்தில் வாழும் ஆசிரியர்களிடமும் சமூக அதிகாரம் செழுத்துபவர்களிடமும் (விதானையார்) தான் பஞ்சாங்கம் இருக்கும். படிப்பறிவற்ற சாதாரண மக்கள் இவர்களை அணுகியே பஞ்சாங்கம் பார்ப்பது வழக்கம். இந்த இடத்திலே நமது அனுபவமொன்றைக் குறிப்பிடுவது பயனுடையதாகலாம்.

தொடரும்

நன்றி: நூல் யாழ்ப்பாணப் பண்பாடு
மறந்தவையும் மறைந்தவையும்








16 வது ஆண்டு நிறைவான சேவை

**Kaneen Electronics**

Internet-sat, Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்

Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal



உங்கள் தாய் மொழியில்....

**HK Hammacher**
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,
துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய
வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத்
தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP

இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



**A.tu.Z Dolmetscher - und Übersetzungsdienst**
**Für alle weltsprachen**

**மொழிபெயர்ப்புச் சேவை!**
V.Ramakrishnan

Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888



உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen

e.mail:atuzuebersetzung@hotmail.com

# இராணுவ வீராங்கனையின் அகில இலங்கைச் சாதனையை தகர்த்தெறிந்த தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மாணவி!











செல்வி.அனித்தா .ஜெகதீஸ்வரன்

பெண்கள் கோலூன்றிப் பாய்தலில் அகில இலங்கை சாதனையை தகர்த்தெறிந்தார் மகாஜனா மங்கை அனித்தா!!!!

இலங்கை 42 தேசிய தடகளப் போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுத் தொடக்கம் (29.09.2016) நடைபெற்றுவருகின்றது. இப்போட்டியில் இன்று (30.09.2016) நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் ஜெகதீஸ்வரன் அனித்தா 3.41மீற்றர் உயரத்தை தாண்டி இலங்கை தேசியமட்ட சாதனையை தகர்த்தெறிந்தார்.

அண்மையில் நடைபெற்ற படைவீரர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் இராணுவ வீராங்கனையான கசிந்தா நிலுக்ஷி 3.40 மீற்றர் உயரத்தை தாண்டி நிலைநாட்டிய சாதனையையே அனித்தா முறியடித்தார். ஒரு மாதத்திற்கு முன்னர் நடைபெற்ற சேர் ஜோன் காபற் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில்

அனித்தாவினால் தேசியமட்டத்தில் 3.35 மீற்றர் என நிலை நாட்டப்பட்ட சாதனையையே குறித்த இராணுவ வீராங்கனை 3.40 மீற்றர் என சாதனை படைத்தார் என்பதும் அதனை அனித்தா மீண்டும் இப்போட்டியில் 3.41மீற்றர் என முறியடித்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அனித்தா அவர்களுக்கும் பயிற்றுநர் சுபாஸ்கரன் அவர்களுக்கும் வெற்றிமணியின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக!!!

## எங்கே போய் தூங்கியதோ இந்தத் தீ



யாழ்ப்பாணக் கோட்டை போல
கர்வமும்
ரோம் நகர் போல சர்வமும்
அழிந்து போனதென்றே எண்ணியிருந்தேன்
இல்லையே
இந்தி ஆமிக்காரன் ஊரை விட்டு
துரத்தினான்
ஒப்பரேசன் லிபரேசனோடு தலைதெறிக்க ஓடி
முள்ளி வாய்க்காலோடு
சரிசெய்யப்பட்டிருக்குமென்றே நினைத்தேன்
இல்லையே
இழக்கக் கூடாததெல்லாம் இழந்தவன்
இதை மட்டும் காத்துவருகிறான்
உயிர் மேலாக
கவரிமான் மயிர் போலாக
சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ் போல்
துப்பாக்கியின் நிழலுக்குள்
இவ்வளவு நாளாய் உறங்கியிருந்த சாதித்திமிர்
இறக்கை கட்டிப்பறக்கிறது

மட்டுவில் ஞானக்குமாரன்






20 ம் பக்கத் தொடர்ச்சி....

# எயிட்ஸ் நோய்



எயிட்சு தற்பொழுது ஒரு பரவல் தொற்று நோயாகும்2007-ல் உலகமெங்கும் 33.2 மில்லியன் மக்கள் எயிட்சோடு வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் 330,000 குழந்தைகள் உட்பட 2.1 மில்லியன் மக்கள் இந்நோயினால் கொல்லப் பட்டிருப்பதாகவும் கணிக்கப்பட்டது இம்மரணங்களில் நான்கில் மூன்று பகுதி ஆப்பிரிக்காவின் சகாராவுக்கருகில் ஏற்பட்டு பொரு ளாதாரவளர்ச்சியைக் குறைத்து மனித மூலதனத்தைச் சிதைத்திருக்கிறது மரபணு ஆராய்ச்சி 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ மேற்கு- மத்திய ஆப்பிரிக்காவில் எச்.ஐ.வி. தோன்றியிருக்கக் கூடும் என்பதைக் காட்டுகிறது எயிட்சு முதன்முதலில் அமெரிக்காவின் நோய்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களில் 1981-ல் கண்டறியப்பட்டது. 1980-களின் முற்பகுதியில் இந்நோய்க்கான காரணம் எச்.ஐ.வி. எனக் கண்டறியப்பட்டது

இந்த நோயானது மனிதர்களின் நோய் எதிர்ப்பாற்றல் முறைமையின் செயற்படுதிறன் வலுவற்றதாகும் நிலையை படிப்படியாகத் தீவிரமடையச் செய்து, வாய்ப்பை எதிர் நோக்கியிருக்கும் தொற்றுநோய்களாலும், கட்டிகளாலும் மனிதர்களை இலகுவில் பாதிப்படையக் கூடியவர்களாகச் செய்கிறது. எச்.ஐ.வி தொற்றுக்குட்பட்ட இரத்தம், விந்து, யோனித் திரவம், முன்விந்துத்திரவம், தாய்ப்பால் போன்ற உடல் திரவங் களைக் கொண்டஉடலில்உள்ள சீதச்சவ்வு அல்லது இரத்த ஓட்டத்துடன் ஏற்படும் நேரடித் தொடர்பினால் இந்த வைரசானது ஒருவரிலிருந்து வேறொருவருக்குத் தொற்றுகின்றது

இத்தகைய நோய்ப்பரப்புதல் ஆசனவாய், யோனிக் குழாய் அல்லது வாய் வழி கொள்ளும் உடலுறவினாலோ, இரத்ததானத்தினாலோ, கிருமி பாதித்த ஊசிகளின் உபயோகத்தினாலோ,தாயிடமிருந்து குழந்தைக்கு கருத்தரிப்பு, பிரசவம், பாலூட்டுதல் போன்றவைகளினாலோ அல்லது வேறெந்த வகையிலாவது மேற்சொன்ன உடல்திரவங்களைச் சாரும்பொழுதோ ஏற்படக்கூடும்.

எச்.ஐ.வி. எயிட்சுக்கான சிகிச்சை, நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வல்லதாயிருந்தாலும் தற்சமயம் இந்நோய்க்கு தடுப்பூசியோ நிரந்தர தீர்வோஇல்லை. மீளூட்டுநச்சுயிரி எதிர்மருந்து எச்.ஐ.வி. நோயின் இறப்புவிகிதத்தையும், பாதிப்பு விகிதத்தையும் குறைக்க வல்ல தாயிருந்தாலும் இம்மருந்துகள் விலையுயர்ந்தனவாகவும், கிடைப்பதற்கு அரியனவாகவும் இருப்பதால் அனைத்து நாடுகளிலும் வாடிக்கையாக கிடைப்பதில்லை இந்நோயை குணப்படுத்துவதற்கு உள்ள இத்தகைய இடர்பாடுகளால், நோய் வராமல் தடுத்தலே இப்பரவல் தொற்றுநோயைக் கட்டுபடுத்துவதிலுள்ள முக்கிய குறிக்கோள் எனக்கருதி வைரசின் பரவலைத் தடுக்க சுகாதார நிறுவனங்கள் பாதுகாப்பான உடலுறவையும், புதிய ஊசிகளை பயன்படுத்துதலின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றனர்.

அடையாளம் காணப்படாமல் இலங்கையில் 2000 எயிட்ஸ் நோயாளிகள்!

HIV தொற்றுக்குள்ளான இதுவரை அடையாளம் காணப்படாத சுமார் 2000 பேர் இலங்கையில் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

HIV தொற்றுக்குள்ளான 2400 பேர் வரை இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சின் பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சிசிர லியனகே குறிப்பிட்டார்.

அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 50 வீதமானோர் ஓரினச் சேர்க்கை யாளர்கள் என்றும் பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் கூறினார். இது தவிர நிர்மாணங்கள் இடம்பெறும் சூழல்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் பலர் HIV தொற்றுக்கு இலக்காகியுள்ளமை தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை யில் நாடாளவிய ரீதியில் 2436 பேருக்கு எச்.ஐ.வி.

நாடாளவிய ரீதியில் 2 ஆயிரத்து 436 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன 394 பேர் மரணடைந்ததற்கான பதிவுகள் உள்ளதாகவும் குறிப்பிட்டார். தற்போது இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனை?, இவர்களில் எயிட்ஸ் நோயாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை எத்தனை?, கடந்த ஐந்து வருடங்களில் மரணித்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு?, இதுவரையில் மரணித்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை?, பாதிக்கப் பட்டவர்களின் ஆயுட் காலத்தை அதிகரிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கை எவ்வளவு? எச்.ஐ.வி.யை கட்டுப்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என புத்திகபதிரண கேள்வியெழுப்பினார்.

அமைச்சர் ராஜித சேனாராத்ன மேலும் தெரிவிக்கையில், நாடாளவிய ரீதியில் இந்தவருடம் 631 பேர் எயிட்ஸ் நோயாளர்களென அடையாளங் காணப்பட்டுள்ளனர். இதுவரையில் 394 பேர் மரணித்துள்ளனர். 2011 ஆம் ஆண்டில் 32 பேரும், 2013ல் 30 பேரும், 2013ல் 27 பேரும், 2014ல் 26 பேரும் 2015ல் 31 பேரும் எயிட்ஸ் நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர். எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ள ஆட்களின் ஆயுட் காலத்தை அதிகரிக்கச் செய்வதற்கு மருத்துவ மட்டத்தில் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எச்.ஐ.வி. பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் சேர்க்கப்படும்போதும் அரச சேவைக்கு ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் போதும் எச்.ஐ.வி. சோதனை நடத்துவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது.

இதேபோன்று தான் சிறைச்சாலைகளில் தண்டனை பெற்ற கைதிகள், கர்ப்பணிப்பெண்கள் ஆகியோரையும் பரிசோதனை செய்யும் நடவடிக்கை களும் முன்னெடுக்கப்படுகின்றன. விழிப்புணர்வு அற்ற செயற் பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் தெற்காசிய வலயத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எயிட்ஸ் நோய் தொற்றுக் குள்ளாவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது என்றார்.

உலகிலுள்ள நோய்களில் மிகக்கொடிய நோயாகக் கருதப்படும் இந்த நோயால் வருடாவருடம் பல்லாயிரம் மக்கள் மாண்டு அழிகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

| | ஆண்டு 2000 | - ஆண்டு 2005 | ஆண்டு 2010 | ஆண்டு 2015 |
|---|---|---|---|---|
| -புதிதாக அடையாளம் காணப்பட்டவர்கள் தொகை | 3.1மில் | 2.7மில் | 2.2மில் | 2.1மில் |
| -இறந்தவர்கள் தொகை | 1.6மில் | 2.0மில் | 1.5மில் | 1.1மில் |
| | 0.7மில் | 2.2மில் | 7.5மில் | 17.0மில் |
| -மொத்தமாகப் பாதிக்கப்பட்டவர்கள் | 30மில் | 34மில் | 35மில் | 38மில் |




ஸ்ரீ மகா காளி ஜோதிட நிலயம்

Sri Maha Kali Jothida Nilayam

யேர்மனி வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி



Astro Palmist
Pandit Thulasidasan

அகில உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
பண்டிற் துளசிதாஸ் அவர்களின் வருகை

ஆன்மீக அன்பர்களின் வாழ்வு மேலும் வளம் பெறவும், திருமணங்கள், காதல்விவகாரங்கள்,வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும் மற்றும் குடும்ப முரன்பாடுகளை நீக்கியும்.குழந்தைச் செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு கேது நிவர்த்திப் பரிகாரங்கள் வழங்கியும் நோய் நொடிகள் கடன் தொல்லைகள் மற்றும் பணம் பொருள் வீடு வாசல் பெற்று பயன்பெற உங்களிடம் யாதகக்குறிப்பு இல்லாவிடினும் கணித்து பலன் சொல்லப்படும். இல்லையேல் கைரேகைமூலம் பலன் சொல்லப்படும்..






Heiderstr.86. 45476 Mülheim
(Bushaltestelle:Steinmetzstr)

காலை 9.00 மணியில் இருந்து
இரவு 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
0152 181 33 859



# திருமந்திரமும் வாழ்வியலும் 12

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## பருவகாலங்கள் பற்றி திருமந்திரம்

பாடல் எண் 1267 இல்

"ஆவின மானவை முந்நூற்று அறுபது
ஆவின மப்பதி னைந்தின மாயுறும்
ஆவின மப்பதி னெட்டுடன் ஆயுரும்
ஆவினம் அக்கதிரோன் வர வந்ததே".

இப்பாடலின் பொருள் சூரியனைக் கொண்டு கணக்கிடப்படும் நாட்கள் முந்நூற்றறுபது ஆகும். இவை பதினைந்து,பதினைந்து நாட்கள் கொண்ட இரு பிரிவாகும். இது சந்திரன் வளர்ந்து,தேய்கின்ற பிறைகளைக் கொண்டு கணக்கிடப்படுவது. சந்திரக் கலை கொண்டு கணிக்கப்படும் பன்னிரண்டு மாதங்களும்இ ஆறு பருவ காலங்களும் (கார்இ கூதிர், வேனில், இளவேனில், முன் பனிக்காலம், பின் பனிக் காலம்) சூரியன் தோன்றத் தோன்றியவையாகும்.

நேரம் பற்றி திருமந்திரம் பாடல் எண் 651 இல்

"முந்திய முந்நூற்று அறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தைசெய் மண்முதல் தேர்ந்தறி ஆர்வலர்
உந்தியுள் நின்று உதித்துஎழு மாறே".

இப்பாடலின் பொருள் சூரியன் உதிப்பதற்கு முன் உள்ள 360 வினாடிகள் (ஒரு வினாடி ஒரு கை நொடிப் பொழுது அல்லது கண் இமைப் பொழுதுஇ 60 வினாடி ஒரு நாழிகை,60 நாழிகை ஒரு நாள்) ஆகாயம் முதலான ஐம்பூதங்கள் (நிலம்இ நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) ஒவ்வொன்றிற்கும் பகலில் ஆறு நாழிகைகள். இரவில் ஆறு நாழிகைகளாக தியானம் செய்யும் முறை தெரிந்தவர்கள் உந்திக் கமலத்திலுள்ள மூலாக்கினியைத் தலைக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கலாம் (சூரிய உதயத்திற்கு முன் ஆறு நாழிகையும், பின் ஆறு நாழிகையும் யோகம் செய்ய ஏற்ற பொழுதாகும்).

இராசிகள் பற்றி திருமந்திரம் பாடல் எண் 1268 இல்

"வந்திடும் ஆகாசம் ஆறது நாழிகை
வந்திடும் அக்கரம் முப்பதி ராசியும்
வந்திடு நாளது முந்நூற் றறுபதும்
வந்திடு ஆண்டு வகுத்துரை அவ்வியே".

இப்பாடலின் பொருள் வானில் தோன்றும் சூரியஇ சந்திரஇ நட்சத்திர அமைப்புகளைக் கொண்டும்இ பஞ்ச பூத நிலைகளைக் கொண்டும் கணிக்கப்படும் நாழிகைகள் பகல் முப்பதுஇ இரவு முப்பது ஆக அறுபது ஆகும். இராசிகள் பன்னிரண்டு. நாட்கள் முந்நூற்றறுபது. சூரியன் செல்லும் பன்னிரண்டு இராசிகளும் இவ்வாறே அறியப்படும்.
இராசிகள் பற்றி திருமந்திரம் பாடல் எண் 1269 இல்

"அவ்வின மூன்றுமவ் ஆடது வாய்வருஞ்
செவ்வின மூன்றுங் கிளர்தரு ஏர்அதாம்
எவ்வின மூன்றுந் தழைத்திடும் தண்டதாம்
இவ்வின மூன்றும் இராசிக ளெல்லாம்"



இப்பாடலின் பொருள் சூரிய வகுப்பில் இராசிகள் மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை 1.மேடம் ஆடு (இடபம், மிதுனம், கடகம், சிம்மம்), 2.இடபம் காளை (கன்னி, துலாம், மீனம், மேடம்), 3.மிதுனம் (விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம்) என்பனவாகும்.

இராசிச் சக்கர அமைப்புப் பற்றி திருமந்திரம் பாடல் எண் 1270 இல்

"இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கர நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே".

இப்பாடலின் பொருள் இராசிச் சக்கரம் மூலாதார முதல் எங்கும் நிறைந்துள்ளது. இராசிச் சக்கரம் ஒளிமயமானது. இந்த இராசிச் சக்கரத்துடன் ஒலியும் ஒருங்கிணைந்து அமையுமானால் இராசிச் சக்கரம் நன்கு நின்று இயங்கும் (நிலை பெறும்).
நட்சத்திரங்கள் பற்றி திருமந்திரம் பாடல் எண் 1271

"நின்றிடு விந்துவென் றுள்ள எழுத்தெல்லாம்
நின்றிடு நாதம் ஓங்கும் எழுத்துடன்
நின்றிடும் அப்பதி அவ்எழுத்தே வரில்
நின்றிடு மப்புறந் தாரகை ஆனதே".

இப்பாடலின் பொருள் ஒளி உருவான எழுத்துக்கள் எல்லாம் உள்ளிருந்து ஒலிக்கும் ஒலியால் உயிர் பெறும். இப்படி எழுத்துக்கள் எல்லாம் அந்த ஆதார சக்கரங்களில் ஒளியாகவும் ஓசையாகவும் நாட்கள் முழுமை அடையும். ஒவ்வொரு ஆதாரத்திற்கும் இரண்டு இராசிகள். பன்னிரண்டு இராசிகளும் ஆறு ஆதாரங்களில் அடங்கும். இருபத்திஏழு நட்சத்திரங்களும் ஆறு ஆதாரங்களில் அடங்கும். ஒரு ஆதாரத்திற்கு நாலரை நட்சத்திரம் (இதனாலேயே சில நட்சத்திரங்களில் இரண்டு இராசிகள் வருகிறது).

திருமூலரின் வயிரவச் சக்கரம் பாடல் எண் 1291 இல்


"அறிந்த பிரதமையோடு ஆறும் அறிஞ்சு
அறிந்த அச்சத்தமி மேலிவை குற்றம்
அறிந்தவை ஒன்றுவிட்டு ஒன்று பத்தாக
அறிந்து வலமது வாக நடவே".

அமாவாசைக்குப் பிறகு வளர்பிறையாகும். இதில் அமாவாசைக்கு அடுத்த நாள் பிரதமை. இதிலிருந்து ஆறுவரை அதாவது சஷ்டி வரை ஆறு ஆதாரங்களிலும் காணப்படும் திதிகள் (பிரதமை, துதியை, திரையோதசி, சதுர்த்தசி, பஞ்சமி, சஷ்டி) என்பதை உணர்ந்து, ஏழாம் நாளாகிய சப்தமி திதிக்கு மேலான அட்டமி நவமி தீதானவை (குற்றம்) என்பதையும் அறிந்து, ஏழை விட்டு எட்டும், ஒன்பதை விட்டுப் பத்தும், பதினொன்றை விட்டுப் பன்னிரண்டும், பதின்மூன்றை விட்டுப் பதினான்கும் ஆகிய நான்கும் முதலிற் கூறப்பட்ட இடங்களிலும் சேர்த்து பத்து இடங்களிலும் வயிரவரை (சிவனது வடிவம்) தலையின் வலப்பக்கமாக நினைத்துத் தியானம் செய்வாயாக.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!




ADCHAYA
கிருஸ்துமஸ் புதுவருடம் பொங்கலுக்கு
அட்சயாவின்அதிரடி... அட்டகாச விற்பனை...!
தனித்தன்மை வாய்ந்த அல்ட்ரா தயாரிப்புகள்
ADCHAYA FESTIVAL GIFT BOX !
இப்போது ஐரோப்பாவில் எங்கும் பரபரப்பான விற்பனையில்...
ULTRA PERFECT +
ATTA KNEADER
ULTRA
PRESSURE COOKER - ENDURA+
COCONUT SCRAPER
✦ 10 வருட உத்தரவாதம்
✦ எலெக்ட்ரானிக் ரைமர் பொருத்தியது
✦ அரைத்து முடிந்ததும் பஸ்ஸர் ஒலி
✦ 150 வாட் மோட்டார் சிறந்த அரவைக்கு
✦ சமைத்த பின்பும் உணவு 2 மணி நேரம் சூடாகவே இருக்கும்
✦ 10 வருட உத்தரவாதம்
✦ துரித சமையலுக்கு ஏற்றது
✦ அதிக அழுத்தம் தாங்கக்கூடிய கீழ்ப்பகுதி
✦ இண்டக்ஷன் ஸ்டவ்விலும் சமைக்கலாம்
✦ கவர்ச்சியான மிடுக்கான தோற்றம்
ULTRA DURA +
✦ 5 வருட உத்தரவாதம் ✦ 85 வாட் மோட்டார்
✦ அரைத்து முடிந்ததும் மாவை இந்த பாத்திரத்திலேயே வைத்துக்கொள்ளலாம்
✦ கவர்ச்சியான மிடுக்கான தோற்றம்
உங்களின் நேசத்துக்குரியவர்களுக்கு அன்பளிப்பு செய்து இந்த இனிய தீபாவளியை மகிழ்வுடன் கொண்டாடுங்கள்!
உங்கள் இல்லத்தில் தெய்வீக மணம் பரப்பும் அகர் பத்திகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். மணம் கமழ...! மனம் மகிழ்ச்சியில் துள்ள...!
நாக் சம்பா அகர் பத்திகள்
NAG CHAMPA AGARBATTI
பரபரப்பான விற்பனையில்...
எங்களின் சொந்த தயாரிப்பான
AYVIN RICE COOKER ...மற்றும்
AYVIN
கிரைண்டர் / மிக்ஸி / குக்கர் மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள், உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்துவித சமையலறை பாத்திரங்கள்
தீபாவளி.. கிருஸ்துமஸ்.. பொங்கல்..
விழாக்கால தள்ளுபடி விற்பனை !
உலகத்தமிழ் மக்களின் நெஞ்சங்களில்என்றைக்கும் நிலைத்து நிற்கும் புத்தகங்கள்...
100 €/£ மேற்பட்ட கொள்வனவு செய்பவர்களுக்கு 49 €/£ வெகுமதியான சப்பாத்தி மேக்கர் முற்றிலும் இலவசம்...!
தொலைபேசி மூலம் ஆர்டர் செய்வோர்க்கும் இச்சலுகைகள் பொருந்தும்
அட்சயாவின் தித்திக்கும் தீபாவளிக்கு நீங்கள் ஆர்டர் செய்யும் பொருட்களை கிப்ட் பாக்ஸில் பெற்றுக்கொள்ளலாம்...!
தொலைபேசி , இ-மெயில் , Viber மூலமாக நீங்கள் ORDER செய்யலாம்..!
அவ்வாறு ORDER செய்வோருக்கு சிறப்பு சலுகைகள் உண்டு..! ஐரோப்பாவில் எங்கிருந்து ORDER செய்தாலும் COURIER மூலம் இரண்டு அல்லது மூன்று தினங்களில் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படும்..!
மேலதிக விபரங்களுக்கு :
e-mail : adchayamedia@yahoo.de , Tel : 004923113091030, Mobile : 017663092804




Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com



## TAX FREE GAIN வரி இலவச வருமானம்

**வரி இலவச வருமானம்**

ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் அதிகபட்சமான வரி ஓட்டைகள் (tax loopholes) ஆரசாங்கத்தினால் மூடப்பட்டாலும், இன்னும் சட்டப்படி நிறைய முற்றிலும் இலவச வரி செலுத்தாத (tax free) விடையங்கள் இருப்பதனை நாங்கள் கீழே ஒவ்வொன்றாக பார்ப்போம்.

**பண பரிசு** (Gift og cash)

கணவன் தன் மனைவிக்கு அல்லது மனைவி தன் கணவனுக்கு சொத்தை மாற்றுவதை தவிர்த்து தனது வயது வந்த பிள்ளைக்கு மாற்றி பின்னர் அதன் மதிப்பு அதிகரித்தால், மூலதன அதாயவரி (capital-gains tax) செலுத்த வேண்டும். எனினும் பணம் பரிசு (gift of cash) tax free ஆனது. ஊதாரணமாக நீங்கள் £15,000 பணத்தை தங்களுடைய பிள்ளைக்கு ஒரு buy to let வீட்டிற்கு முதலீட்டு பணமாக கொடுக்கலாம். உதாரணமாக பிள்ளையின் tax rate 20% ஆகவும், தங்களுடைய tax rate 40% ஆகவும் இருந்தால் வாடகை இலாபத்தின் மூலம் செலுத்தும் வரி குறைவாக இருக்கும். சொத்தை கொடுப்பவர் 7 வருடங்கள் வாழ்ந்தால் சொத்து வரி (Inheritance tax) செலுத்தும் கட்டம் ஏற்படமாட்டாது.

**வீட்டு வாடகை வருமானம்**

நீங்கள் தங்களுடைய வசிக்கும் வீட்டில் ஒரு பகுதியை இன்னும் ஒருவருக்கு வாடகைக்கு கொடுத்து அதன் வாடகை வருமானம் £7500 ற்கு மேல் ஒரு வருடத்திற்கு இல்லாவிட்டால் எந்த வருமான வரியும் செலுத்தத் தேவையில்லை. ஒரு வருடத்திற்கு உதாரணமாக £10,000 வாடகை வருமானம் கிடைத்தால் மிகுதி £2500 ற்கு மட்டுமே வரி செலுத்த வேண்டும். April 2016 முதல் £7500 அமுலுக்கு வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (இதற்கு முன்னர் £4250).

**பரவல் வர்த்தம்** (spread trading)

பஙுகுச் சந்தையில் (share market) பரவல் பர்த்தக முறைப்படி பங்குகளை வாங்கி விற்பனை செய்து அதனால் கிடைக்கும் இலாபத்திற்கு எந்த விதமான மூலதன ஆதாய வரியும் (capital gains tax) செலுத்தத் தேவையில்லை. இந்த இலாபம் £10,000 ஆக இருந்தாலும் அல்லது George Soros போல் பண சந்தையில் (currency market) Sterling Pounds ற்கு எதிராக விற்பனை செய்து billion பணம் வருமானம் கிடைத்தாலும் சரி பரவல் வர்த்தக முறைப்படி இந்த இலாபம் கிடைப்பின் இதற்கு எந்த வரியும் செலுத்த தேவையில்லை. (UK ல் மட்டும் தான் இந்த வரி விலக்கு உண்டு).

**உங்கள் வாகனம்** (car)

நீங்கள் உங்களின் சொந்த வாகனத்தை விற்பனை செய்யும் பொழுது அதற்கு இலாபம் கிடைத்தால் எந்த விதமான வரியும் அரசாங்கத்திற்கு செலுத்த தேவையில்லை. அனேகமான சந்தர்ப்பங்களில் வாகனங்களில் ஆண்டிற்கு ஆண்டு தேய்மானம் (depreciation) ஏற்படுவதனால், இலாபம் ஏற்படும் சூழ்நிலை மிகவும் குறைவானதாகும்.

**ஆணிகலன்கள், ஓவியங்கள், பழமைவாய்ந்த பொருட்கள்** (Antiques, Jewellery, Paintings) சொந்த உடமையான பொருட்களை (personal possessions) £6000 மதிப்புவரை எந்தவிதமான வரியும் செலுத்தாமல் விற்பனை செய்யமுடியும்.

விற்கும் விலை less £6000
times 5/3
குறைந்த amount
உதாரணம்:
கரன் என்பவர் தனது £3000 ஓவியத்தை £8000 ற்கு விற்கின்றார்
£2000 x 5/3
£3333
இலாபம் £5000
Chargeable gaqin £3333 (3333 என்பது £5000 இலும் குறைவு)

பயண செலவு ஈடுசெய்தல் (Travel reimbursement)

நீங்கள் தங்களுடைய வாகனத்தை (car) தொழில் நீதிக்காக உபயோகித்தால் முதல் 10000 mile ற்கு 45p ம் அதற்கு மேல் அடைநள ற்கு 25p ம் வரி செலுத்தாமல் பெற்றுக் கொள்ள முடியும். ஊதாரணமாக வருடத்திற்கு 12,000 தொழில் முறையாக miles செய்திருந்தால் £5000 பெற்றுக் கொள்ள முடியும்.

**வேலைத்தளத்தில் இருந்து கடன்**

வேலை செய்யும் தொழிலாளிகள் வேலைத்தளத்தில் இருந்து £10,000 வரை கடனாக பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு எந்த விதமான வரியோ அல்லது national insurance செலுத்தத் தேவையில்லை. (முற்காலத்தில் இருந்த £5000 li அவை தற்பொழுது £10,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது).

**அந்நிய வெறிநாட்டு நாணய இலாபம்** (Foreign currency gain)

அந்நிய நாட்டு நாணய bank account மூலம் கிடைக்கும் இலாபங்கள் April 2012ம் ஆண்டு முதல் வரி விலக்காக கருதப்படுகிறது உதாரணமாக £50,000 பணத்தை US dollar bank account ற்கு மாற்றம் செய்து பின்னர் £/$ மாற்றங்களினால் £60,000 ஆக உயர்வடைந்தா இதனால் கிடைக்கும்; £10,000 இலாபத்திற்கு வரி செலுத்த தேவையில்லை.

**Dividend** (£5000)

முதல் £5000 வரை எடுக்கும் னஎைனைநனெ பணத்திற்கு வரி செலுத்தத் தேவையில்லை. முதலீடுகளை கணவன் மற்றும் மனைவி இருவர் பெயரில் வைத்திருப்பதன் மூலம் இருவரும் £5000 வரி விலக்கு பெற்றுக்கொள்ள முடியும் (மொத்தம் £10,000)

**கீழே தரப்பட்டிருக்கும் பலவகையான பணங்களும்** tax free ஆகும்.
Redundancy பணிநீக்க வருமானம் - upto £30,000
25% ஓய்வூதிய சேமிப்பு
காப்பீடு வருமானம்- Insurance payment. உதாரணம் car write off
Personal injury claim
வேலைத்தள Staff Party (upto £150 per person)
one mobile phone
வேலைத்தள car parking space




ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்


Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main











# ஆலயம் அருகே ஓர் ஆலயமாய் சர்வோதயம்!

01.10.16 அன்று யேர்மனி என்னப்பெற்றால் நகரில், புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி மன்றத்தினர் கிராமிய பூபாளம் 2016 என்ற பெயரில் கலைமாலைப்பொழுதொன்றினை நடந்தியிருந்தனர்.

வரவேற்புரை நன்றியுரை என்ற இரண்டையும் உள்ளடக்கி உரைகளாக, நற்பணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சமூகஜோதி திரு.கணேசு மகாலிங்கம், அவர்களும் பிரதம விருந்தினராக நூலகவியலாளர் திரு.என் செல்வராஜா, சிறப்பு விருந்தினர்களான லைக்கா மொபைல் சர்வதேசப் பொறுப்பாளர் திரு.பிறேம் சிவசாமி, திருமுறைப் பாவேந்தர் திரு.சோமு சச்சிதானந்தம், (நற்பணி ஒன்றியத் தலைவர்,செயலாளர்,) வெற்றிமணி,சிவத்தமிழ் பிரதம ஆசிரியர், கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்,அகரம் சஞ்சிகையின் ஆசிரியரும் ஐரோப்பிய வானொலி இயக்குனர் திரு.த. இரவீந்திரன் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றிருந்தன. எல்லோருடைய உரைகளிலும் ஒரு மையப்புள்ளியாக புங்குடுதீவில் இயங்கி வரும் சர்வோதய நற்பணி மன்றத்திற்குத் தொடர்ந்தும் செய்ய வேண்டிய உதவிகள் பற்றியும் சர்வோதயத்துடன் அவரவர் கொண்டுள்ள அனுபவங்களை உரைகளாக வெளிப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக, வர்த்தகத்துறையில் வலுவாக கால் ஊன்றி நிற்கும் தீவுப்பகுதி வர்த்தகர்களின் உதவியில்லாமல் எந்தவொரு ஊடகத்தையும் நடத்த முடியாத உண்மை நிலை உள்ளதை அகரம் பத்திரிகையின் ஆசிரியர் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

வெற்றிமணி ஆசிரியர் உரையாற்றும் போது சர்வோதயத்திற்குத் தான் போன போது, சர்வோதயம் எங்கு உள்ளது என்று புங்குடுதீவு மக்களை தெருவில் கேட்டபோது நேரகப் போங்கள் பெருங்காடு கந்தசுவாமி ஆலயம், வரும் அதன் பக்கம் சர்வோதயம் உள்ளது என்றார்கள். நேரே சென்று அவர்கள் சொன்னபடி சர்வோதயம் அமைந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது அது ஆலயம் அருகே அமைந்துள்ள மற்றுமொரு ஆலயமாகவே சர்வோதம் தெரிந்தது. அங்கு அவர்கள் மக்களுக்கு ஆற்றும் சேவை மகாத்தானது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு அல்லவா!

இங்கு இயங்கும் சர்வோத நற்பணி மன்றத்தை முன்பு பெரிதாக அறிந்திருக் கவில்லை. அங்கு சென்றபோது அவர்கள் யேர்மனியில் இயங்கும் நற்பணி மன்றத்தின் செயற்பாடுகளை சொன்னதன் பின்பு அதன் சேவையை அறிந்து கொண்டேன். இங்கு அறிந்து கொள்ள முடியாதை அங்கு வைத்து அறிந்து கொண்டேன்,எனக் குறிப்பிட்டு, அதற்கு உதாரணமாக கோபுரத்தின் அழகு தூரத்திலிருந்து பார்க்கும் போது தெரியுமென்று சர்வோதய நற்பணி மன்றம் ஆற்றிவரும் செயல்பாடுகள் பற்றி தனது உரையில் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைப்பபாளர் சமூகஜோதி திரு.கணேசு மகாலிங்கம் அவர்களின் உரையில் அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற பண்பு நூலிழையாக பரவி நின்றதைக் கவனிக்க முடிந்தது. தொடர்ந்தும் சர்வோதய நற்பணி மன்றச் செயல்பாடுகளை ஒருங்கிணைந்து செய்வோம்,“ என்னை விட்டிட்டு யாருமே போகாதீர்கள்“என அவர் அன்புடன் அறைகூவல் விட்டதைக் கவனிக்க முடிந்தது. செயல்பாடுகளின் மகிழ்வாக எற்படும் ஆனந்தப் பிரவாகம் அவரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீராக வெளிப்பட்டு நின்றதை நான் அவதானித்தேன். அவரிடம் காணப்பட்ட நற்பண்புகளால் அவர் அனைவரையும் ஒருங்கிணைந்து வைத்திருந்தார் என்பதை மறுக்க இயலாது. 50 வருட சேவையைப் பாராட்டி, மண்டபத்தின் வாசலிலிருந்து திரு.கணேசு மகாலிங்கம் அவர்களை அவர் மனைவி மகளுடன் அழைத்து வர, இந்நற்பணி மன்றத்தினரின் மகளிர் அணியினரும் திரு.மாவை சிவம் அவர்களும் , அவரைப் பாராட்டிப்பாடி நிர்வாக சபை உட்பட அனைவரும் இணைந்து “சமூக ஜோதி“ என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தனர்.









## காஷ்மோரா கதாபாத்திரம் இயக்குநர் கோகுலின் கடுமையான உழைப்பால் உருவானது – கார்த்தி

கார்த்தி நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் காஷ்மோரா. இப்படத்தை இயக்குநர் கோகுல் இயக்கியுள்ளார். ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவில் உருவாகியுள்ள இப்படத்திற்கு இசை சந்தோஷ் நாராயணன் , இப்படத்தின் இசை மற்றும் ட்ரைலர் அக்டோபர் 7 ஆம் தேதி அன்று வெளியானது. காஷ்மோரா தீபாவளி வெளியிடாக திரைக்கு வருகிறது. கார்த்தி நயந்தாரா கலக்கல்.

இப்படத்தில் வரும் காஷ்மோரா கதாபாத்திரம் இயக்குநர் கோகுலின் கடுமையான உழைப்பால் உருவானது. இந்த கதாபாத்திரத்தை உருவாக்க இயக்குநர் கோகுல் அதிக காலம் எடுத்து கொண்டு மிகவும் ஆழமாக ஆராய்ந்து இப்பாத்திரத்தை படைத்துள்ளார். ஏனென்றால் இப்பாத்திரம் மிகவும் புதுமையானது , தமிழ் சினிமாவில் இதுவரை யாரும் கையிலெடுக்காத ஒரு கதாபாத்திரம். ஆம் , காஷ்மோரா என்பவன் இது வரை தமிழ் சினிமாவில் யாரும் ஆழமாக சொல்லாத , தொடாத பில்லி , சூனியம் , ஏவல் போன்றவற்றை செய்யும் பிளாக் மேஜிசியன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்பாத்திரம் ராஜ் நாயக் பாத்திரத்தில் இருந்து முற்றிலும் வேறுபாடும். நிச்சயம் இதை ரசிகர்கள் மிகபெரிய அளவில் ரசிப்பார்கள் என்றார் கார்த்தி.






மகதீரா தெலுங்கில் ராம்சரண் அல்லு அர்ஜுன் இருவரும் இணைந்து நடித்து அமோக வெற்றி பெற்ற எவடு என்ற படமே தமிழில் மகதீரா என்ற பெயரில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது.

கதாநாயகிகளாக காஜல் அகர்வால், எமி ஜாக்சன், ஸ்ருதிஹாசன் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். மற்றும் சாய்குமார், கிருஷ்ணமோகன், ஜெயசுதா ஆகியோர் நடிக்கிறார்கள்.

படு ஆக்ஷன் படம் இது. அல்லு அர்ஜுன் காஜல் அகர்வால் இருவரும் காதலர்கள். காஜல் மீது தூத்துக்குடியில் உள்ள மிகப்பெரிய தாதாவுக்கும் காதல்.வில்லனிடமிருந்து தப்பிக்க நினைக்கும் இருவரும் தப்பியோடுகிறார்கள். வில்லன் அவர்களை மடக்கி பிடித்து காஜலை கொன்று விடுகிறார்கள். அல்லு அர்ஜுனை தீவைத்து கொளுத்தி விடுகிறார்கள்.

அதிலிருந்து தப்பிக்கும் அல்லு அர்ஜுனின் முகம் முழுவதும் எரிந்து போய் விடுகிறது. டாக்டர்களின் முயற்சியால் ராம்சரணின் முகம் அல்லு அர்ஜுனுக்கு அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப் படுகிறது.தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய வில்லன் கூட்டத்தை எப்படி பழி தீர்க்கிறார் என்பது கதை ! படு ஆக்ஷன் படமாக மகதீரா உருவாகியுள்ளது என்றார் A.R.K.ராஜராஜா.




**சமந்தாவுடன் காதல் முதல் திருமணம் வரை: மனம் திறந்த நாக சைதன்யா**

மலையாளத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற “ப்ரேமம்“ படம் தெலுங்கில் ரீமேக்காகி வருகிறது. தெலுங்கிலும் “ப்ரேமம்“ என்ற பெயரிலேயே அக்டோபர் 7-ம் தேதி வெளியாக கலக்குகிறது. இப்படத்தை விளம்பரப் படுத்துவதற்காக அளித்துள்ள பேட்டியில் சமந்தா வுடனான காதல் மலர்ந்தது எப்படி, சமந்தா மதம் மாறுகிறாரா உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.

சமந்தா மதம் மாறுகிறார் என்ற சர்ச்சைக்கு, ”சமந்தா மதம் மாறவில்லை. இந்த போட்டோ எப்படி வந்ததென்று தெரியவில்லை. அப்பா ஒரு பூஜைக்கு அழைத்தார். எங்களுக்கு படப்பிடிப்பு இல்லை என்பதால் நாங்கள் சென்றோம். கலந்து கொண்டோம். அவ்வளவுதான்.மதம் மாறுவதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒருவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே ஏற்றுக்கொள்வதில்தான் எனக்கு விருப்பம். அனைவரையும் பொதுவாகவே பார்க்கிறேன். மதம், ஜாதி வைத்து யாரையும் பிரித்துப் பார்த்ததில்லை. நாம் அனைவரும் மனிதர்களே” என்று பதிலளித்துள்ளார். மேலும், சமந்தாவை ஏன் பிடித்தது என்பதற்கு, ”அவர் மிகவும் வெளிப்படையானவர். நேர்மையானவர். மனதில் இருப்பதை அப்படியே சொல்லிவிடுவார். அந்த குணம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்படித்தான் காதல் ஆரம்பித்தது என நினைக்கிறேன்” என்று கூறியுள்ளார்.





Hückelhoven நகரில்

**Asiatischer Super markt**

**ஆசியா சமுத்திரம்**

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயைான
மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும்
மலிவாகவும் கிடைக்கும்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

VIJAY

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை

Ria Money Transfer — MoneyGram International Money Transfer — VALUTRANS MONEY TRANSFER








## குட்டி இளவரசருக்காக மண்டியிட்ட கனடிய பிரதமர்!

கனடாவில் தரையிறங்கிய பிரித்தானியாவின் குட்டி இளவரசர் ஜோர்ஜை, அந்நாட்டு பிரதமர் Justin Trudeau மண்டியிட்டு வரவேற்றுள்ளார். கடந்த மாதம் பிரித்தானியா இளவரசர் குடும்பம் அரச குடும்ப சுற்றுப்பயணமாக கனடா சென்றனர்.

விக்டோரிய சர்வதேச விமான நிலையம் வந்த இளவரசர் வில்லியம்ஸ், இளவரசி கேட், குட்டி இளவரசர் ஜோர்ஜ், குட்டி இளவரசி சார்லோட் ஆகியோரை கனடிய பிரதமர் துரளவலை வுசரனநயர அவரது மனைவி சோபி உட்பட பலர் நேரில் வந்து வரவேற்றனர். இதன்போது, வில்லியம்ஸ், கேட் ஆகியோரை விட பிறந்து 16 மாதமே ஆன குட்டி இளவரசி சார்லோட், இளவரசர் ஜார்ஜ் ஆகியோர் பார்வையாளர்களை கவர்ந்தனர். இளவரசர் ஜோர்ஜை, கனடிய பிரதமர் மண்டியிட்டு வரவேற்ற நிகழ்வு பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

## நான் ரஜினியை இயக்கினால் யாருக்கும் 10 நாளைக்கு வசனமே கேட்கக் கூடாது:



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் படத்தை இயக்கினால் முதல் 10 நாட்களுக்கு தியேட்டரில் யாருக்குமே ரஜினி பேசும் வசனமே கேட்கக் கூடாது என ராஜமவுலி தெரிவித்துள்ளார். பிரபாஸ், தமன்னா, அனுஷ்கா, ராணா உள்ளிட்டோரை வைத்து பாகுபலி என்கிற பிரமாண்ட படத்தை எடுத்து வெளியிட்டு உலக சினிமாவை தன்னை திரும்பிப் பார்க்க வைத்தவர் எஸ்.எஸ். ராஜமவுலி. தற்போது பாகுபலி படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கி வருகிறார்.

ரஜினி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை வைத்து ஒரு படத்தையாவது இயக்க வேண்டும் என பல இயக்குனர்கள் ஆசைப்படுகிறார்கள். ராஜமவுலி எல்லா இயக்குனர்களை போன்றும் நானும் ரஜினிகாந்தை வைத்து ஒரு படத்தையாவது இயக்க வேண்டும் என விரும்புகிறேன். எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்தால் முதல் 10 நாட்களுக்கு தியேட்டருக்கு செல்லும் யாருக்கும் ரஜினி பேசும் வசனம் கேட்கக் கூடாது என்கிறார் ராஜமவுலி. விசில் என்னது 10 நாட்களுக்கு யாருக்கும் வசனமே கேட்கக் கூடாதா என்று கேட்டால், ரஜினி பேசும் வசனம் கேட்காத அளவுக்கு தியேட்டர்களில் விசில் பறக்கணும், கைத்தட்டலாக இருக்கணும் என்று ராஜமவுலி தெரிவித்துள்ளார்.

## வாழ்த்துகின்றோம்




எசன் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்- நுண்கலைக்கல்லூரியில் பயின்று மிருதங்க வாத்தியத்தில் மிருதங்க கலாஜோதி பட்டம் பெற்றுள்ளார்.

செல்வன் ஷங்கர்ஷண் ஜெயந்திநாதக்குருக்கள் மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம். இவர் பிரபல மிருதங்க ஆசிரியர் நகுஷாந்த் நயினை விஜயனின் மாணவர். இவரது மிருதங்க அரங்கேற்றம் சென்ற ஆண்டு மிகச்சிறப்பாக யேர்மனியில் இடம் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அகில உலக “பத்மா சுப்பிரமணியம்” விருது பெற்றார் வெற்றிமணி எழுத்தாளர் கலாசூரி திவ்யா சுஜேன்

23.10.2016



வெற்றிமணியில் தொடர்ச்சியாக “நின்னைச் சரணடைந்தேன்” என்கின்ற தேன்சுவை கொண்ட பாரதியின் பாடல்களை இளைய நடையில் இனிப்பாகத்தரும் நர்த்தகி திவ்வியா அவர்களது ஒவ்வொரு வெற்றியையும் எம்கலையின் வெற்றியாக எண்ணி மகிழ்கின்றது வெற்றிமணி






லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

**Rising Sun Hotel & Restaurant**

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K

Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு